விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை (18.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அபிவிருத்தியின் அடையாளங்களை விட போரின் வடுக்கள் பெரிதாய் உள்ளன

## ஐ.நா. அதிகாரிகளுடனான சந்திப்பில் யாழ்.ஆயர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் யுத்தம் ஏற்படக் காரணமாக இருந்தது எது என்பதை ஆராய்வதைவிடுத்து அபிவிருத்தி செய்தால் மட்டும் போதும் என்ற எண்ணப்பாட்டுடன் அரசாங்கம் செயற்படுகின்றது. யுத்தகாலத்தில் இறந்தவர்களுக்காக அஞ்சலி கூட செலுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையில்தான் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகளிடம் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை முறையிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



## கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு கிழக்கில் அச்சுறுத்தல்!

(மட்டக்களப்பு)

அச்சுறுத்தல் காரணமாக 5 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கிழக்கு மாகாணத்தை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய 5 மாகாண உறுப்பினர்களே இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளனர்.

குறித்த 5 புதிய மாகாண சபை உறுப்பினர்களும் கொழும்புக்குச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இனந்தெரியாத சிலர் ஆளும் கட்சிக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு முதலமைச்சராக நஜீப் ஏ.மஜீட் தெரிவு?

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சராக முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான நஜீப் ஏ.மஜீட்டை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பத் தகுந்த அரச தரப்புவட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு தெரிவான நஜீப் ஏ.மஜீட் முதலமைச்சராக பதவியேற்றால், முதல் முஸ்லிம் முதலமைச்சராக விளங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், (19ஆம் பக்கம் பார்க்க)


## புலமைப்பரிசில் பரீட்சை முடிபுகள் 30ஆம் திகதிக்குள்

(கொழும்பு)

இவ் வருடம்நடைபெற்று முடிந்த 5ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ந-11)

## 150 பேருடன் வந்த சீனக்குழு ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திப்பு

### உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன



(கொழும்பு)

சீனாவின் அதிப... ஹு ...ின்டாவோவுக்கு அடுத்த நிலையில் அதிகாரமுள்ள தலைவராகவ...ள வூ பங்குவோ நேற்று அலரி மாளிகையில் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இவருடன் கொழும்பு வந்துள்ள 150 பேர் கொண்ட குழுவில் உயர்மட்ட சீனத் தலைவர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## சொந்த இடங்களில் மீள்குடியேற்றக்கோரி முல்லைத்தீவில் கவனயீர்ப்பு போராட்டம்

### த.தே.ம.முன்னணி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டம் கோப்பாபிலவு கிராம மக்களை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தக் கோரி எதிர்வரும் 21ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அனுப்பிய குழுவினரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியினர் விடுத்துள்ள அறிக்கையில், யுத்தம் முடிபடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கோப்பாபிலவு கிராம மக்கள் இன்னமும் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

அக்கிராமம் உள்ளிட்ட 2500 ஏக்கர் நிலத்தில் நிரந்தரமாக இராணுவ தலைமையகம் ஒன்றினை அமைத்துள்ளதுடன் இக்கிராமமக்களை அவர்களது விருப்பங்களுக்கு மாறாக வேறு இடங்களில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் வருகையைக் கண்டித்து சேலத்தில் ஒருவர் தீக்குளிப்பு



(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா வருவதற்குஎதிர்ப்பு தெரிவித்து சேலத்தில் நேற்று ஆட்டோ டிரைவர் விஜயராஜ் என்பவர் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தார்.

தனது தீக்குளிப்பு எதிர்ப்பு நடவடிக்கைக்கு முன்பதாக விஜயராஜ் 36 பக்கத்துக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கின் முதலமைச்சர் முஸ்லிம் என்பதில் உறுதி

### ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் முஸ்லிம் ஒருவர் என்பது உறுதியாகிவிட்டது. நாங்கள் அரசுடனும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப் போடும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

நேற்று (19ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.நா.குழுவை கூட்டமைப்பு 20ஆம் திகதி சந்திக்கும்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் நாளை மறுதினம் சந்தித்து பேசவுள்ளனர்.

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளான ஹன்னி மெகாலியும், ஆஸ்கர் செல்டர்ஸ் ஆகிய இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்.அரசு நேர்மையாக நடக்க வேண்டும்-பிரிட்டன்

(கொழும்பு)

அபிவிருத்தி மற்றும் மீளமைப்பு தொடர்பில் அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று இலங்கை வந்துள்ள பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவின் தலைவர் றொபேர்ட்டா பிளக்மென் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இதுவரையில் மேற்கொண்ட அபிவிருத்திகள் மற்றும் மீளமைப்பு தொடர்பில் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

## ரகசிய இராணுவ சி.டியுடன் திருச்சியில் ஒருவர் கைது!

(திருச்சி)

இந்திய இராணுவ ரகசியங்கள் அடங்கிய சிடியுடன் இலங்கைக்கு தப்பிவர முயன்றதாக கூறப்படும் நபர் ஒருவர் திருச்சி விமான நிலையத்தில் வைத்து இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச்சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெளிநாட்டுப் பொருட்களை வாங்கி (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஹக்கீமும் வேண்டாம்; சம்பந்தனும் வேண்டாம்

# அரசின் தனி ஆட்சியே பாதுகாப்பானது!

## ஒன்றிணைந்தால் ஆபத்து என்கிறார் குணதாச

கிழக்கின் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தற்போது பிரதான அரசியல் கட்சிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன. கிழக்கின் அதிகாரத்தை ஸ்தாபிக்கும் போட்டியில் பிரதான தரப்பினராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகழ்கின்றது.

இவ்வாறிருக்கையில், தேசிய சம்மேளனங்களின் ஒன்றியம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அதன் இணைப்பாளர் குணதாச அமரசேகர, கிழக்கு மாகாண ஆட்சியை, அரசாங்கத்தைத் தவிர வேறு யாரும் கைப்பற்றுவார்களானால் அது தனி இராஜ்ஜியம் உருவாகுவதற்கு வழிவகுக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தரப்பில் இனவாதம் அற்ற 15 உறுப்பினர்கள் உள்ளனர். சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த 11 பேர் உள்ளனர். ஹக்கீம் தலைமையில் 7 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சியமைத்து 13ஆம் திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த கோருகின்றனர்.

அவர்களது கோரிக்கையினை நடைமுறைப்படுத்த வேண்டிவரும். ஹக்கீம் இல்லாவிட்டாலும் இந்த 15 பேரை வைத்துக் கொண்டே ஆட்சி அமைக்க முடியும்.

ஹக்கீமும் வேண்டாம், சம்பந்தனும் வேண்டாம். இவர்கள் கிழக்கில் ஒரு பகுதியையும், வடக்கில் ஒரு பகுதியையும் எடுத்துக் கொண்டு இவர்கள் நிர்வாகத்தை ஏற்படுத்த முயல்கின்றனர். இதனை அனுமதிக்க முடியாது என குண தாச அமரசேகர தெரிவித்துள்ளார்.


## தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கைநெறி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான 1ம், 2ம், 3ம், கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். 2012 உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை மேலதிகமாக பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், BIT கற்கை நெறி,MCS தொ.பே.772395895

BIT சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.

(C-1077)


## தெய்வீகப் பேருரை

யாழ்ப்பாணம்–வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் தெய்வீகப் பேருரைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒருபகுதியாக இன்று செவ்வாய்க் கிழமை மாலை 7.30 மணிக்கு வைஷ்ணவத்தின் தொன்மை என்னும் தலைப்பில் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேருரை ஆற்றவுள்ளார். (ந-11)

## திருநெல்வேலி இ.த.க.பாடசாலை அலுவலக திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் அலுவலகத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா பிரதம விருந்தினராகவும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத் தலைவர் ச. முத்துலிங்கம், திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் ரி. மோகன்றாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ந)

## கூட்டமைப்பு உறு...

ஆதரவளிக்குமாறு த.தே.கூட்டமைப்புஉறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்து வந்ததாக கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சிக்கு ஆதரவளித்தால் சலுகைகளும் வரப்பிரசாதங்களும் வழங்கப்படும் என தமது கட்சி உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## ஆமைகளை கடத்திய இருவர் கைது!

தேங்காய் மூட்டைகளுக்குள் மறைத்து ஆமைகளைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த மூட்டை களுக்குள் இருந்து 10 ஆமைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் வைத்து பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி ஆமைகளுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேகநபர்கள், குறித்த ஆமைகளை விற்பனைக்காக கொண்டு செல்ல முயன்றுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் கூறினர். (ந-11)


## ஜெய்குருதேவ் வாழும் கலைப் பயிற்சி



யோகாசனங்கள், தியானங்கள், பிராணாயாமா, சுதர்சன கிரியா ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றது.

இலவச அறிமுக உரை

இடம் : மகேஸ்வரன் மணி மண்டபம் (நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகாமை)

காலம் : 18.09.2012 செவ்வாய் பி.ப. 5.00

மேலதிக தொடர்புகளுக்கு:- 0770474757

(445)


## விநாயகர் சதுர்த்தியன்று விஷேட தீர்த்தவாரி

இருபாலை, கோப்பாய் கற்பகப் பிள்ளையார் கோவிலில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விஷேட தீர்த்தவாரி (பக்தர்கள் நீர் ஊற்றுதல்) நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 6 மணி முதல் மாலை 3 மணிவரை இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு கற்கப் பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும் பூஜை வழிபாடுகளும் இடம்பெறும்.

பின்னர் மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று எம்பெருமான் வீதியுலா வருகை தரும் அருட்காட்சியை அடியார்கள் தரிசிக்க முடியும். (ந-11)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1940 09 28



இறப்பு 2011 09 29

### அமரர் வீரகத்தி நாகமுத்து

திதி : திருதியை

ஓராண்டு சென்றதப்பா – நீ
எம்மை விட்டுச் சென்று ஆனாலும்
நீங்காது எம் பாசம் ஆறாது எம் துயரம்
நீருலகில் நல்வாழ்வு போதுமென்று
நிமலன் தாள் அடைந்தீரோ!

சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். – குடும்பத்தினர்

(C-1075)

## விற்பனைக்கு

ஒரு வீட்டுக்குரிய ஓடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0776705157

(433)

## பெயர் மாற்றம்

சிவன் வீதி, சிவநகர், உருத்திரபுரம் என்னும் விலாசத்தில் வசிக்கும் கோபால சிங்கம் மகன் கோபிதா ஆகிய நான் எனது பெயரை 18.09.2012இல் இருந்து கோபிதன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்றும் அதன்படியே இனிமேல் சகலவற்றிற்கும் ஒப்பமிடுவேன் என்றும் இலங்கை குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

இங்ஙனம்
கோ. கோபிதன்

(C-1075)

## செல்லா சினிமா- யாழ்ப்பாணம்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



முகமூடி

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

(C-941)

## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் இயங்கிவரும் வாழ்வக நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு நற்பண்பும் சேவை உள்ளமும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. எழுதுநர்

க.பொ.த. உயர்தரம் வர்த்தகத் துறையில் பயின்றிருப்பின் குறைந்த பட்சம் இரண்டு பாடங்களிலேனும் சித்தி பெற்றிருக்க வேண்டும். ஏனைய துறைகளில் பயின்றிருப்பின் க.பொ.த. சாதாரண தரத்தில் வர்த்தகமும் கணக்கியலும் பயின்றிருப்பதுடன் உயர் தர வகுப்பில் மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றி ருத்தல் வேண்டும். வாழ்வக இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற முன்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. விடுதி மேற்பார்வையாளர்

முப்பது வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சுயவிபரங்களுடனான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 27.09.2012 க்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும்.

தலைவர்
வாழ்வகம்

(C-1076)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### மீன்களும் பாடும்

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தது.

அந்தச் சமயத்திலே ஜேர்மனிய கடற்படையிடம் "யு- போட்" எனும் கப்பல்கள் இருந்தன. அந்தக் கப்பல் இருக்கும் இடத்தை இரகசியமாகக் கண்டு பிடிப்பதற்காக அமெரிக்கக் கடற்படை "ஹைட்ரோஃபோன்" எனும் கருவியை உபயோகப்படுத்தியது.

இக்கருவியை நீரினுள் செலுத்தி ஆராய்ந்து கொண்டிருக்கையில், திடீரென எதிர்பாராமல் சில ஓசைகள் கேட்டன.

இவ்வோசைகள் எங்கேயிருந்து வருவதாக மேற்கொண்டு முயற்சி செய்து பார்த்தார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

அதன்பின்னர்தான் தெரிந்தது அவையெல்லாம் கடலில் உள்ள சில மீன்கள் போடும் சத்தங்கள் என்று.

அதிலேயும் சற்று நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தபோது, அவையெல்லாம் சத்தம் அல்ல; சங்கீத ஓசையென்று தெரிந்து கொண்டார்கள்.

சங்கீதம் என்பது ஏதோ மனிதனுக்கு மட்டுமே சொந்தமான ஒரு சங்கதி என்று நினைக்கக் கூடாது.

பறவைகளுக்கும் பாடத் தெரியும்; மீன்களுக்கும் பாடத்தெரியும்; இது சமீபகால ஆராய்ச்சியின் பயனாகத்தான் நமக்குத் தெரியும்.

இந்திய வானம்பாடி... நன்றாகப் பாடக்கூடியது... அதனாலேதான் அதற்கு வானம்பாடியென பெயர் வந்தது.

ஒரு சில பறவைகள், **(Jack daws, Magpies, Star lings)** கிளிகள் மாதிரி பேசும்- பாடவும் செய்யும்.

தென் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவில் மணிப் பறவை **(Bell Bird)** என்ற பறவை இனம் அதிகளவில் உள்ளது. அது பாடும் பாட்டு மிக நீண்ட தூரம் கேட்கும்.

இதேவேளை, ஐரோப்பாவில் உள்ள தேன்சிட்டு, அவுஸ்திரேலியாவில் உள்ள லயர் பறவை இவையெல்லாம் நன்றாக இராகத்துடன் பாடும்.

மீன்களைப் பொறுத்தவரை டாம்செல் **(Dam sell)**, காட் **(God)** ஹேடாக் **(Had dock)** இவையெல்லாம் நன்றாக சத்தம் போடும்.

இதிலே கடலிலே நன்றாகப் பாடக்கூடியது திமிங்கலம்... அமெரிக்காவில் உள்ள இரு பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சியாளர்கள் திமிங்கலம் போடும் சத்தத்தை பதிவு செய்து வைத்துள்ளார்கள்.

அந்தச் சத்தத்தில் ஒரு தாளலயம் இருக்கிறது தெரிய வந்துள்ளது.

மீனுக்குப் பாடத்தெரியும்... திமிங்கலத்துக்குப் பாடத் தெரியும். நம்மில் சில பேர் பாடகர்களாக இருப்பதினால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதுண்டு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நில ஆக்கிரமிப்பை கண்டித்து முல்லைத்தீவில் கவனயீர்ப்பு

## அழைக்கிறது த.தே.கூட்டமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நில ஆக்கிரமிப்பை கண்டித்து எதிர்வரும் 24 ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேற்கோள்காட்டி பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாகவும் இந்த நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவுவதாக அரசாங்கம் பிரகடனம் செய்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால், இன்னும் மக்களின் வாழ்வில் ஒளி பிறக்கவில்லை.

இன்றைக்கும் இராணுவ வலையங்களுக்குள் சுதந்திரத்தை இழந்து வாழுகின்ற நிலைமை தொடர்கின்றது. இன்னமும் மீள்குடியேற்றம் முழுமையாக நிறைவுபெறவில்லை.

செட்டிகுளத்தில் அகதி முகாம்களுக்குள் மிகவும் சொல்லொணா துன்பம் சுமந்து மக்கள் வாழ்கின்றார்கள். போரால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நிலம் இன்றைக்கும் நில ஆக்கிரமிப்பாலும் இராணுவ மயத்தாலும் வேதனைப்படுகின்றது.

கேப்பாப்புலவு கிராமம் மிகவும் நிம்மதியோடு வாழ்ந்த கிராமம். இப்போது தன் மக்களை இழந்து பிரிந்து இராணுவ தளங்களாக ஆக்கிரமிக்கப்பட்டு மக்களிடையே எதிர்காலம் பற்றிய அச்சம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நிலத்திற்கு சொந்தமான மக்கள் அகதி முகாம்களிலும் வேறு இடங்களிலும் ஒதுங்க இடமின்றி அல்லற்பட அவர்களின் நிலங்கள் சுற்றுலா வருவோரின் காட்சிப் பொருளாகவும் களியாட்ட இடமாகவும் இருக்கிற சூழலே இப்போது வெளிப்படை.

எமது கடற்றொழிலாளர்கள் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கடற்பரப்புக்களில் சுதந்திரமாக தொழிலில் ஈடுபடுவதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளது.

அந்த கடற்பரப்புகளில் சிங்கள கடற்றொழிலாளர்கள் இராணுவ அனுசரணையுடன் எமது கடல் வளங்களை அள்ளிச் செல்கின்றார்கள். இது எமது மக்களின் சீவனோபாயத்தை அழிக்கும் செயல். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. எனவே, எமது மக்கள் எமது நிலங்களுக்கு செல்ல வேண்டியதும் எமது நிலங்கள் சிங்கள மயப்படுத்தப்படுவதை தடுக்க வேண்டியதும் இந்த சூழ்நிலைகளை சர்வதேசத்தின்கவனத்திற்கு கொண்டுவர வேண்டியதும் இன்றைய காலத்தின் கடமையாகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் இன்றைய அடிப்படை உரிமைகளை கருத்தில் கொண்டும் மீள்குடியேற்றப்படாத மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் நில ஆக்கிரமிப்புக்களை கண்டித்தும் காணாமற்போனோர், சிறையில் இருக்கின்றதமிழ்கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் முல்லைத்தீவு நகரமையத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இதற்கு மக்களை திரளுமாறு அழைப்பதோடு தமிழர் தேசிய ஆதரவு கட்சிகளையும் சிங்கள தமிழர் ஆதரவு சகோதர கட்சிகளையும் மலையகத்தின் நேச கட்சிகளையும் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடப்படுகின்றது. இதேவேளை, புலம்பெயர் தமிழ் மக்களும் இதே நாளில் கவனயீர்ப்பு போராட்டங்களை செய்து பலம் சேர்க்குமாறு நேசமுடன் வேண்டப்படுகிறீர்கள் என்றுள்ளது.(அ-6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 65 |
| உருளைக்கிழங்கு | 70 | 60-80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 45 | 60 | 60 | 65 |
| தக்காளி | 40 | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 45 | 50 |
| கோவா | 60 | 60 | 60 | 60 |
| கரட் | 90 | 100 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 25 | 50 |
| புடோல் | 40 | 30 | 30 | 50 |
| வாழைக்காய் | 45 | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 65 | 60 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 40 | 50 | 65 |
| பாகற்காய் | 55 | 60 | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 65 | 90 |
| பயற்றங்காய் | 70 | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 15 | 50 | 30 | 60 |
| போஞ்சி | 65 | 80 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 150 | 240 | 250 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 | 25 |

## இராசி பலன்

*18.09.2012*
*(புரட்டாதி 02, செவ்வாய்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*திருதியை பின்னிரவு 3.09 மணிவரை*
*சித்திரை பின்னிரவு 1.03 மணிவரை*
*இராகுகாலம் 3.03-4.33 மணிவரை*
*சுபநேரம் 10.33-12.03 மணிவரை*

**மேடம்** மறக்க முடியாத சில சம்பவங்கள் நடைபெறலாம், உடல் நலம் சீராகும், பெருமைகள் வந்து சேரும், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக தீர்க்கமான முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொலைபேசி வழித்தகவலால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டு பேசும் சூழ்நிலை உருவாகும், மாமன் மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கடகம்** பெற்றோர் நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிங்கம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டியநாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பீர்கள்.

**துலாம்** பக்குவமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக அலைய நேரிடலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்** செலவுகள் அதிகரிக்கும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயர்வடையும், பொருட்சேர்க்கையுண்டு.

**மகரம்** எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும், செலவுக்கேற்ப பணம் வந்து சேரும், மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும் நாள், போசன சுகமுண்டு, கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் நன்மையுண்டு.

**கும்பம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், நேற்றைய பணியொன்று இன்று தொடரலாம், உடல்நலம் சீராகும், பேச்சை குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள.

**மீனம்** வரவும் செலவும் சமமாகும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை அதிகரிக்கும், தொழில் ரீதியான பயணங்களால் கூடுதல் கவனம் தேவை.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வந்த ஐ.நா.ம.உ.அதிகாரிகள் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு







(யாழ்ப்பாணம்)

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஐ.நா. மனித வுரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் பலாலிக்கு முற்பகல் 9.15 மணியளவில் விமானம் மூலம் வந்திறங்கிய இந்தக் குழுவினர் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைவரம் தொடர்பில் அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைமைகளை துருவித் துருவி ஆராய்ந்தனர்.

இதன்போது வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப்பணிகள், மீள்குடியேற்றம், மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் போன்ற விடயங்களை விளக்கப்பட உதவியுடன் விளங்கப்படுத்தினார்.

தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் குடியேற்றப்பகுதியான அரியாலை நாவலடிக்கு விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா.அதிகாரிகள் குழுவினர் அங்கு இந்திய அரசாங்கத்தினால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பார்வை யிட்டதோடு வீட்டுத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுடனும் கலந்துரையாடினர்.

இதன்போது உங்களுடைய சொந்த இடங்களை விட்டு வெளியேறுவதற்கு என்ன காரணம் எனக் கேட்டதோடு வாழ்வாதார நிலைமைகளையும் ஆராய்ந்தனர்.

எமது சொந்த இடங்களை விட்டு வெளியேறுவதற்கு யுத்தமே காரணம் எனவும் நீண்ட காலத்திற்கு பின்பே எமது சொந்த இடங்களுக்கு நாம் திரும்பியுள்ளோம் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தியன் வீட்டுத்திட்டத்தில் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் உள்ளிட்ட அதிகாரிகள் ஐ.நா.அதிகாரிகளுக்கு காண்பித்தனர்.

மேலும் இந்தியன் வீட்டுத்திட்டத்தைப் பார்வையிட்டு ஐ.நா.குழுவினர் அருகிலிருந்த ஓலைக்குடிசைகளையும் பார்வையிட்டதோடு ஏன் இன்னும் அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை எனவும் கேள்வி எழுப்பினர்.

இதற்கு இந்தியன் வீட்டுத்திட்டத்தில் முதற் கட்ட நிதியில் 50 வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. இரண்டாம் கட்ட நிதியில் ஏனையோர்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார்.

அதிகாரிகள் ஐ.நா.குழுவினரை அழைத்துச் செல்ல முற்பட்ட போதும் அந்தக்குழுவினர் அப்பகுதியிலிருந்த ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று நிலைமைகளைக் கேட்டறிய முற்பட்டதோடு ஓலைக்குடிசைகளில் இருந்தவர்களின் நிலைமைகளைக் கண்டு கவலைப்பட்டனர்.

இதன்பின்பு சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் இந்தக் குழுவினர் சென்று சந்தித்து கலந்துரையாடினர்.

ஐ.நா.குழுவினருடனான சந்திப்பின்போது வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலன், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், நல்லூர் பிரதேச செயலக செயலாளர் ப.செந்தில்நந்தனன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் குழுவில் ஆசிய, பசுபிக், மத்திய, கிழக்கு மற்றும் வட அமெரிக்கப் பிரதிநிதி ஹானி மெகாலி மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டம், ஒழுங்கு, ஜனநாயகம் தொடர்பான பிரதிநிதி ஒஸ்கார் சோலர்ஸ் உள்ளிட்ட 6 பேர் வருகை தந்திருந்தனர். (அ-6)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறைப்பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை சென். நீக்கலஸ் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கோவில் ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை கடற்கரை வீதி, காதிஅபூபக்கர் வீதி சந்தியிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை கண்ணாபுரம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கண்ணாபுரம் முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத் தெருவிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

### விளையாட்டுத்துறை ஊடாக

## ஆளுமையையும் அறிவையும் விருத்தி செய்ய முடியும்

### ஜெயா தம்பையா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளிச் சிறார்களின் கல்விச் செயற்பாடுகளை விளையாட்டுத்துறை ஊடாக முன்னெடுத்து செல்ல முடியும். ஆளுமையும் அறிவும் அதனூடாகவே விருத்தி செய்யப்படுகின்றன என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள மழலைகளுக்கான விளையாட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளிச் சிறார்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் அவர்களை ஆளுமை மிக்கவர்களாக உருவாக்கும் வகையில் இவ்வாறான விளையாட்டுப் போட்டிகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தி வருகின்றோம்.

மேலும் கல்வி அமைச்சு வலியுறுத்தியதன் பிரகாரம் இவ்வாறான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றோம். எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக முன்பள்ளிச் சிறார்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டதோடு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் சிறப்பு விருந்தினராகவும் நிகழ்வில் பங்கு கொண்டனர். (அ-6)

## வாய்க்கால்களில் கழிவுகள் தேக்கம்

### மக்கள் விசனம்

(கரவெட்டி)

மழைகாலம் அண்மித்த நிலையில் வடமராட்சி பிரதேசத்தில் உள்ள வீதியோர வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமையால் மழைகாலங்களில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலையுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்திலுள்ள பிரதேச சபைகள், நகர சபைகள், கமநல திணைக்களங்கள் தமக்குரிய வீதியோர வாய்க்கால்களை இன்னமும் புனரமைக்காமையால் தற்போது வாய்க்கால்களில் பற்றைகள், கழிவுப்பொருட்கள் மற்றும் தேவையற்ற குப்பை கூழங்கள் அதிகமாக காணப்படுகின்றன.

இதனைக்கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## யாழ்.செய்திகள்...

### விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், இருபாலை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் விநாயகர் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப்பிள்ளையாருக்கு காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் பக்தர்கள் தங்களுடைய கைகளால் தீர்த்தவாரி செய்யலாம்.

பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேகம், பூஜைகள் நடைபெற்று மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப்பூஜை நடைபெற்று வீதியுலா வருதல் நடைபெறுமென தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

### ஒளிப்பதிவு நாடாவை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் அலகினால் அண்மையில் நடத்தப்பட்ட பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபத்திலே பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கான ஒளிப்பதிவு நாடாப் பிரதிகள் (DVD) நேற்றைய தினம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

உரிய பட்டதாரிகள் தமது மாணவர் பதிவு அட்டையை சமர்ப்பித்து நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப்பிரிவு இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2006 இல் காணாமல் போனோர் தொடர்பில் நேற்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனோர்கள் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆரம்பமானது.

ஐந்து நாட்கள் இடம்பெறும் இந்த விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள் குழு கொழும்பிலிருந்து வருகை தந்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் காணாமல் போனவர்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணை இடம் பெற்று வருகின்றது.

இந்தக் காலப்பகுதியில் சுமார் 500 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருந்தனர்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது ஐ.நா. பிரதிநிதிகள் அங்கு வருகை தந்ததோடு இவ்வளவு காலமும் விசாரணைகள் இடம்பெறாததற்கான காரணங்களையும் அங்கு கூடியிருந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

# ஐ.தே.கட்சியை மீட்டெடுக்க ஒழுங்கான தலைமை அவசியம்

## அஸ்கிரி பீடாதிபதி தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுக்க ஒழுங்கான தலைமை அவசியம் என கண்டி அஸ்கிரி பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேயவர்தன அஸ்கிரி பீடாதிபதியை சந்தித்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் ஒன்றிணைந்தே தேர்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். தலைமைப் பதவிக்கு அடித்துக் கொள்ளாமல் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கட்சிக்கு சரியான ஒரு தலைவரை நியமிக்க வேண்டும். கரு ஜயசூரியவை ஒரு பக்கமும் சஜித் பிரேமதாசவை ஒரு பக்கமும் அனுப்பி கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது. (அ-2)

யாழ்.மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

21 ஆவது ஆண்டு நிறைவு விழா அழைப்பிதழ்

எமது சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 19.09.2012 அன்று புதன்கிழமை பகல் 11 மணியளவில் சங்கத்தின் தலைவர் திரு.இ.பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் இல.559, நாவலர் வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்வில் அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்னாள் அங்கத்தவர்கள், முன்னாள் பணியாளர்கள் அனைவரும் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செயற்குழு சார்பில்
செயலாளர்
கா.பாஸ்கரன் (சி/1074)

# கைக்குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு பூம்புகார் வாவிக்கரைப் பகுதியில் உள்ள பழைய மாடு அறுக்கும் மடுவத்துக்கு அருகில் இருந்து மூன்று கைக்குண்டுகளை மட்டக்களப்பு பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை பையொன்றினுள் சுற்றப்பட்ட நிலையில் இருப்பதை அப்பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கண்டு அவர்கள் வழங்கிய தகவலையடுத்து இக்கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இக் கைக்குண்டுகள் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்படவுள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
September 2012 to February 2013
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48 (சி-1075)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

## விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முயற்சித்த வேளையில் கைதான 52 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று காலி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இவர்கள் சிலாபத்திலிருந்து அவுஸ்திரேலியா நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 4<br>கி.பா:-66, 12 இல் செவ்வாய்<br>தொழில்:-MBBS டாக்டர்<br>B/199 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- விசாகம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா:-20.5, 4 இல் செவ்வாய்<br>தொழில்:-A/L Dip.in.English (ரியூசன் ஆசிரியை)<br>G/476 |
| பிறப்பு:- 1978 R.C<br>நட்சத்திரம்:- திருவாதிரை 3<br>உயரம்:-5'9"<br>கி.பா:-8<br>தொழில்:- தச்சுத்தொழில்<br>B/430 | பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 4<br>உயரம்: 5'3"<br>கி.பா:-56.75<br>தொழில்:-பட்டதாரி பயிலுநர்<br>G/489 |
| பிறப்பு:-1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ரேவதி 1<br>உயரம்:-5'4"<br>கி.பா:-47, 12 இல் செவ்வாய்<br>தொழில்:-BIT அரச ஆசிரியர்<br>B/429 | பிறப்பு:- 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புனர்பூசம் 4<br>உயரம்: 5'<br>கி.பா:- 11.75, 12 இல் செவ்<br>தொழில்:-B.A நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>G/498 |
| பிறப்பு:- 1966 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம்<br>கி.பா:-நோர்வே PR விவாகரத்து பெற்றவர் (சாதகமில்லை)<br>B/408 | பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ஆயிலியம் 2<br>உயரம்: 4'11"<br>கி.பா:- 52, 4 இல் செவ்<br>தொழில்:- வியாபார முகாமைத்துவம்<br>G/487 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
அடக்க அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அழுத்தம் வந்தாலும் படையினரை அரசு காப்பாற்றும்

## அமைச்சர் பசில் உறுதியளிப்பு

(கொழும்பு)

**சர்வதேச ரீதியில் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த படையினரை பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

திபுலபிட்டியவில் படையினருக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளை கையளிக்கும் வைபவம் அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,கடந்த 2005 நவம்பர் 17 ஆம் திகதி நாட்டு மக்கள் நாட்டின் ஆட்சியதிகாரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்தனர். அவர் அதைப் பொறுப்பேற்கும் போது நாட்டின் பூமிப் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு மட்டுமே இருந்தது. அதேபோன்று கடற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியே அரச நிர்வாகத்திடம் இருந்தது.

ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை மூலம் நாட்டின் மீதான பகுதி உத்தியோகபூர்வமாக புலிகளின் நிர்வாக பிரதேசமென ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் முப்படையினர் தமது சீருடையுடன் புலிகளின் பிரதேசத்திற்கு செல்ல வேண்டுமானால் புலிகளின் அனுமதி பெற்றே செல்ல வேண்டியிருந்தது.

அதுமட்டுமன்றி சாதாரண பிரஜைகள் கூட ஓமந்தைக்கு அப்பால் செல்ல வேண்டுமானால் புலிகளின் அனுமதிபெற வேண்டியிருந்தது. அதுபோன்ற நிலையிலிருந்த நாட்டையே ஜனாதிபதி பொறுப்பேற்றிருந்தார்.

அவரது வழிகாட்டிலில் பாதுகாப்பமைச்சின் செயலாளரின் தலைமையில் முப்படையினரின் தியாகத்தின் மூலம் குறுகிய கால கட்டமொன்றில் முழு இலங்கையையும் ஒரே நாடாக ஒரே கொடியின் கீழ் கொண்டுவர முடிந்தது.

இந்த நாட்டினதும் முப்படையினரினதும் உயிர்த்தியாகத்தால் தான் இதனை ஜனாதிபதியால் மேற்கொள்ள முடிந்தது என்பதை குறிப்பிட வேண்டும்.

ஒரு பக்கம் படையினருக்கு தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள், மறு பக்கம் அதற்காக சிறந்த படையினரை உருவாக்குதல் இரண்டிலும் அவரது கவனம் செலுத்தப்பட்டது.

படைவீரர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு அரசாங்கத்தால் முடிந்துள்ளது. இதற்கு அரசாங்கத்தின் நிதி மட்டுமன்றி பலரது நன்கொடைகளும் கிடைத்தன.

நாடு இந்தளவு இப்போது அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்படுகின்றமைக்கு மூல காரணமானவர்கள் படையினரே. இதற்காக அவர்கள் உயிரை தியாகம் செய்தது மட்டுமன்றி எதிர்க்கட்சியின் கேலிக்கும் நகைப்புக்கும் உட்பட நேர்ந்தது. கிளிநொச்சி போகிறோம் என்று மதவாச்சி போனதாக கேலி செய்தார்கள்.

இத்தகைய சகல சூழ்நிலையிலும் படையினர் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்து செயற்பட்டனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## முன்னேஸ்வரத்தில் மிருக பலிபூஜை இல்லை

(சிலாபம்)

முன்னேஸ்வரம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மிருகபலி பூஜை இந்தமுறை நடைபெறாது என்று அந்த கோவிலின் பிரதமகுரு காளிமுத்து சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இதற்கான காரணம் குறித்து அவர் விளக்கமளிக்கவில்லை. எனினும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தொடர்ச்சியான அழுத்தங்களால் இந்த பூஜை நிறுத்தப்படிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அனைத்து இந்து கோவில்களிலும் இவ்வாறான மிருகபலி பூஜைகள் இடம் பெறுகின்றனவா இல்லையா என்பது தொடர்பில் தாம் ஆராயவிருப்பதாக மேர்வின் சில்வா எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## வேணாவில் கிராமத்தில் இன்று மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

யுத்தத்தால் இடம்பெயர்ந்து வவுனியா செட்டிகுள நலன்புரி நிலையத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேணாவில் கிராம 202 குடும்பங்கள் (687 உறுப்பினர்கள்) இன்று மீள்குடியேற்றப்படவுள்ளதாக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

மேலும் கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் இருந்து 88 குடும்பங்களை சேர்ந்த 300 உறுப்பினர்களும் ஆனந்தகுமாரசுவாமி நலன்புரி நிலையத்தை சேர்ந்த 11[illegible] குடும்பங்களை சேர்ந்த 387 உறுப்பினர்களுமே ஐ.ஓ.எம். (IOM) நிறுவனத்தின் நிதியுதவியுடன் 14 பேருந்துகளில் மக்களும் பாரவூர்திகளில் அவர்களது உடைமைகளும் எடுத்து வரப்பட்டு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டு குடும்ப பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அன்றைய தினமே தமது சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கு 3 நாட்களுக்கான சமைத்த உணவும் உணவுப் பொதிகளும் ஒரு குடும்பத்திற்கு 2 லீற்றர் மண்ணெண்ணெயும் முல்லை. மாவட்ட செயலகத்தால் வழங்கப்படவுள்ளது. (அ-3-267)

## பிரிட்டனில் பணிபுரிந்த தமிழர்கள் மூவர் கைது

(கொழும்பு)

லண்டன் நகரில் லூசியம் பகுதியில் அமைந்துள்ள தமிழருக்கு சொந்தமான எவரெஸ்ட் உணவகத்தில் சட்டவிரோதமாக பணிபுரிந்த மூவர் பிரித்தானிய குடிவரவு குடியகல்வு அமைச்சினால் நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது கைது செய்யப்பட்டனர்.

குறித்த மூவரும் சட்டவிரோதமாக பணிபுரிந்து வந்த தமிழர்கள் ஆவர். இவர்கள் கடந்த வருடம் நவம்பர் இருபத்தைந்தாம் திகதி பிடிபட்டனர்.

கைதான மூவரும் பிரித்தானியாவில் தங்கி இருப்பதற்கான விசா நிராகரிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து சட்டவிரோதமாக வாழ்ந்து வந்ததாக குடிவரவு குடியகல்வு அதிகாரிகளினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

கைதான மூவரிடமிருந்தும் தலா பதினைந்தாயிரம் பவுண்டுகள் தண்டமாக அறவிடப்பட்டுள்ளது. எனினும் இவர்கள் மூவருக்குமான தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. எனினும் கைதானவர்களின் பெயர் விபரங்களை குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இருபாலை கிழக்கு பகுதியில் இளைஞர் குழுவின் அட்டகாசம்

### நடவடிக்கை எடுக்க கோரிக்கை

இருபாலை கிழக்கு அரசடி சந்தி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் மாலை, இரவு வேளைகளில் அப்பகுதி இளைஞர்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்து எல்லை மீறியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாலை, இரவு வேளைகளில் அப்பகுதிகளில் ஒன்றுகூடும் இளைஞர் குழுக்கள் குடித்துவிட்டு அப்பகுதியால் செல்லும் பெண்களுடன் சேஷ்டைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமல்லாது கூச்சலிடுவதும் வீதியால் செல்லும் பெரியவர்களை பார்த்து கிண்டலடிப்பதும் நள்ளிரவு வேளைகளில் கூச்சலிட்டவாறும் மோட்டார் சைக்கிள்களை வேகமாக செலுத்தி சென்று மக்களின் தூக்கத்தை கெடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விளைஞர் கூட்டங்களின் அடாவடித்தனங்களால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தனியாக பாடசாலைகளுக்கோ தனியார் கல்வி நிலையங்களுக்கோ அனுப்புவதற்கு தயங்கும் நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் இவர்களின் இச் செயல்கள் தொடருமாயின் அப்பகுதி வாழ் மக்களின் அன்றாட நிலை முடக்கப்படும் நிலை உருவாகலாம் என்றும் தெரிவித்ததோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக உரிய கவனமெடுத்து இந்நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)





யாழ்.எயிட் நிறுவனத்தினரால் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டுக்கான பல்வேறான உதவிப்பொருட்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கிருபா லேணர்ஸ் [illegible] மாணவருக்கு உதவிப்பொருள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வெடி விபத்தில் 8 பேர் காயம்

பதுளை பசறை பகுதியில் உள்ள மக்கள் வங்கியொன்றில் பாதுகாப்பு ஊழியர் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்தமையால் 8 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண வீரகேசரி இணையத்தளத்துக்கு தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பசறை வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்

## 17.09.2012 - 16.10.2012



## மிதுனம்

மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்!**

**சாமர்த்தியமும், சாதுர்யமும் கொண்டு விளங்கும் மிதுன இராசி நேயர்களே!**

## மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புள்ளது

நீங்கள் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருப்பீர்கள். காற்று புக முடியாத இடத்தில்கூட, உங்கள் கருத்து புகுந்துவிடும். பேச்சே உங்களுக்கு மூலதனம். பெரியவர்களை பார்க்கும்போது நீங்கள் காட்டும் மரியாதையைக் கண்டு அவர்கள் அசந்துபோய்விடுவார்கள். படிப்பைக் காட்டிலும், அனுபவ அறிவு மிக்கவர்களாக நீங்கள் விளங்குவதால்தான் குறுகிய காலத்திலேயே முன்னேற்றம் காண்பீர்கள்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் புதன் உச்சம் பெற்றிருக்கிறார். அர்த்தாஷ்டம சனி விலகி விட்டது. 12 இல் சஞ்சரிக்கும் குருவோ வக்ரம் பெறப்போகிறார். அப்புறமென்ன உங்கள் காட்டில் பண மழைதான் பொழியப்போகிறது.

மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். மங்கள நாண் சூட்டும் விழாக்கள் முதல் மழலைப்பேறு பிறப்பதற்கான அறிகுறி வரை தோன்றும் மாதமாக இந்த மாதம் அமையலாம். விலகி சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம். பழகிய நண்பர்கள் பகையாகி விட்டார்களே என்ற கவலை இனி அகலும்.

உலகியல் வாழ்வில் பல அனுபவங்களை கற்றதன் விளைவாக, உங்களுக்கென ஒரு தனிப்பாதையை அமைத்துக் கொள்வீர்கள். செவ்வாய் பெயர்ச்சிவரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மாதத்தின் முதல் பத்து நாட்களுக்குள் மன மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெற்றாலும், மனக்கசப்புகள் கருதியோ, உத்தியோகத்தில் சேர்வது சம்பந்தமான முயற்சிகளோ கைகூடவில்லையே என்று கவலைப் பட்டவர்களுக்கு இப்பொழுது அனுகூலம் ஏற்படும்.

**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரமும், ரிஷப குருவின் வக்ரமும்!**

சிம்மத்தில் செப்ரம்பர் 28 ஆம் திகதி சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். எனவே, உடன்பிறப்புகள் தரும் சம்பவங்களும் நடைபெறலாம். காரணம், செவ்வாய், சனிசேர்க்கை. சனீஸ்வர வழிபாட்டை மேற்கொண்டால் வளர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி அகலும்.


**விருச்சிக செவ்வாயும், துலாம் புதனும்**

செப்ரம்பர் 27 ஆம் திகதி செவ்வாய், புதன் ஆகிய இரண்டு கிரகங்களும் மாறுகின்றன. விருச்சிக செவ்வாயின் ஆதிக்கத்தால் சொத்து விற்பனை தனலாபம் உண்டு. சொந்தங்கள் இடையே பகை வளராமல் பார்த்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்திலிருந்து சிலர் விடுபட நினைப்பர். கடன்சுமை குறைய சிலர் விலை உயர்ந்த பொருளை விற்க நேரிடலாம். அதேநேரத்தில் துலாம் இராசியில் சஞ்சரிக்கும் புதன் சில நற்பலன்களையும் வழங்கும். பிள்ளைகள் வழியில் செய்த சில ஏற்பாடுகள் கைகூடும். குறிப்பாக கல்யாண வாய்ப் வழியில் ஏற்படும் சுபகாரியப் பேச்சுக்களை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அந்நிய தேசத்திலிருந்து வரும் கடிதம் அனுகூலமான தகவலை தரும். 7-10 க்கு அதிபதியான குரு அக்டோபர் 12 ஆம் திகதி ரிஷபத்தில் வக்ரம் பெறுகிறார். எனவே, தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பங்குதாரர்கள் வந்து இணைவார்கள்.

இந்த மாதம் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் பெருமைகள் வந்து சேரும்

இந்த மாதம் சனி விலகியதால் சந்தோஷங்கள் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொகை வரவு திருப்தி தரும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேருவர். சுக்ர பெயர்ச்சிக்கு பின்பு வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் பெண் குழந்தைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். மாதக் கடைசியில் இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறுவதற்கான அறிகுறிகளும் தோன்றும். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட பகை மாறி பாசம் கூடும். குடும்பப் பெரியவர்கள் மனம் மகிழும் விதத்தில் இனிய சம்பவமொன்று இந்தமாதம் நடைபெறும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கடகம்

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**விரயங்களை சுபவிரயமாக்கிக் கொள்ளுங்கள்!**

**நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் முடிக்க வேண்டும் என்று சொல்லும் கடக இராசி நேயர்களே!**

## நற்காரியங்களை மேற்கொண்டு, நற்பலன்களைப் பெறமுடியும்

நீங்கள் சிந்தனை ஆற்றல் மிக்கவர்கள். செல்வம் சேர்ப்பதிலேயே குறிக்கோளாக இருப்பீர்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதிலேயே ஆனந்தம் உங்களுக்கு உண்டு. பொதுவாழ்வில் பொறுப்புகளை அதிகம் பெற்றவர்களும் நீங்கள் தான். குடும்பத்தினர்களை மட்டும் நீங்கள் அனுசரித்து சென்றால் குதூகலமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, நல்ல பலன்கள் பலவற்றை நீங்கள் சந்தித்தாலும்கூட அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கத்தில் அல்லவா இருக்கிறீர்கள். அத்தோடு செவ்வாயும் 4 இல் இணைந்திக்கிறது. எனவே, ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்தவேண்டிய நேரமிது. அடுத்தவர்களுக்காக பிரியாசை எடுத்து செய்யும் காரியங்களில்கூட ஆதாயம் குறைவாகவே கிடைக்கலாம். மன உளைச்சல் ஏற்படாமல் இருக்க சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

கருநிற காகம் ஏறி காசினி தன்னைக் காக்கும் என்ற சனி கவசத்தைப் பாடி சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். எள்தீபத்தை ஆலயங்களில் ஏற்றி வழிபடுவது நல்லது. எள் கலந்த சாதத்தை காகத்திற்கு வையுங்கள். இப்படி சனி பரிகாரங்களைச் செய்தால் சந்தோஷங்கள் வந்துசேரும். நாலில் சனி வரும் பொழுது நல்ல விரயங்களை நாமும் மேற்கொள்ள நேரிடலாம். பூமி வாங்குவது, புதிய நூதன பொருட்களை வாங்குவது, பொன், பொருள் வாங்குவது, சாமி காரியங்களுக்காக நல்ல திருப்பணிச் செலவிடுவது, தன்னைச் சார்ந்தவர்களுக்காக மனமுவந்து உதவி செய்வது போன்ற கைங்கரியங்களைச் செய்தால் சனி சந்தோஷப் படுவார். பொதுவாக, மற்றவர்களின் வாழ்த்துக்களால் வளர்ச்சியடைய வேண்டிய நேரமிது.

**விருச்சிக செவ்வாயும் துலாம் புதனும்!**

விருச்சிக இராசியில் செப்ரம்பர் 27 ஆம் திகதி செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அதேநாளில் துலாம் இராசிக்கு புதனும் செல்கிறார். இந்த இரு நிகழ்வுகளும் உங்களுக்கு நன்மையை தரும் விதத்திலேயே அமைகின்றன. பொதுவாக, 5 இல் ஐந்தாம் இடத்திற்கு அதிபதி வரும் பொழுது, பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும் புதன் பெயர்ச்சியின் விளைவாக தாய்வழி ஆதரவு பெருகும்.

சகோதரர்கள் உங்களுக்கு இணக்கமாக நடந்துகொள்வர். ஒரு சிலர் புதிய வாகனங்கள் வாங்கவும் முன்வரும்.

**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரமும் ரிஷப குருவின் வக்ரமும்!**

அசுர குருவாலும், தேவ குருவாலும் ஏற்படக்கூடிய மாற்றங்கள் உங்களுக்கு நல்ல மாற்றங்களாகத் தான் இருக்கின்றன. செப்ரம்பர் 28 ஆம் திகதி சுக்ர பெயர்ச்சியின் விளைவாக, வெளிநாட்டு அனுகூலம் ஒரு சிலருக்கு விரும்பும் விதத்தில் அமையும். உள்நாட்டிலேயே ஒரு சிலர் ஊர் மாறலாம். இளைய சகோதரத்தால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். அக்டோபர் 12 ஆம் திகதி குரு வக்ரம் பெறுவதால், குருவின் வக்ர இயக்கத்தால் தொழில் வளம் கூடும். தொகை வரவு பெருகும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். இனிய வாழ்வில் எதிர்ப்புகளை தெரிவித்தவர்கள் நட்பினராக மாறலாம்.

இம்மாதம் மலைவலம் வந்து மகத்துவம் காணுங்கள். அனுமன் வழிபாடும் ஆனந்தம் வழங்கும்.

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாக அமைகிறது. குடும்பத்தினர்களை அனுசரித்து செல்வது நல்லது. செவ்வாய், சனி சேர்க்கை இருப்பதால் கணவன்- மனைவிக்குள் கனிவுகூட விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. குடும்பச் செலவுகள் கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை. சில பூமிகளை விற்க நேரிடலாம். இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் வருவது தவிர்க்க முடியாததாக இருக்கும். அங்காரக வழிபாடும், சனிவழிபாடும் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஷ்பிரயோகங்கள் 6 வீதத்தால் அதிகரிப்பு

## பொலிஸ் பேச்சாளர்

(கொழும்பு)

இலங்கையில் சிறார்கள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் 6 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 750 மனித கொலைச் சம்பவங்கள் பதிவாகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்த போர்ச் சூழலில் நாட்டில் வருடாந்தம் சுமார் ஆயிரத்து 500 மனித படுகொலைச் சம்பவங்கள் பதிவானதாகவும் இதற்கமைய தற்போதைய புள்ளிவிபரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது குற்றச்செயல்களில் அதிகரிப்பு காணப்படவில்லை எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சாஞ்சியில் திட்டமிட்டபடி 21 ஆம் திகதி போராட்டம்

## வைகோ விடாப்பிடி



(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு தமிழகத்தில் பலத்த எதிர்ப்பு கிளம்பி உள்ளது. சாஞ்சி நகரில் அவருக்கு எதிராக வைகோ தலைமையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ம.தி.மு.க. அறிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தை கைவிடும்படி மத்திய பிரதேச முதல் மந்திரி சிவராஜ்சிங் சவுகான் வைகோவை கேட்டுக் கொண்டார். ஆனால் வைகோ மறுத்து விட்டார். திட்டமிட்டபடி 21 ஆம் திகதி சாஞ்சி நகரில் கறுப்புக் கொடி போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர். இலங்கை ஜனாதிபதி மஹிந்தர ராஜபக்ஷ எதிர்வரும் சாஞ்சி நகருக்கு வருகிறார். அங்கு நடைபெறும் புத்த பல்கலைக்கழக அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்ளவுள்ளார். (அ-2)

# சிறைச்சாலையில் தமிழ்பேசும் அதிகாரிகளை நியமிக்க வேண்டும்

## மட்டு. சிறைக்கைதிகள் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள 6 சிறைக்கைதிகள் நேற்று காலையிலிருந்து கூரை மீதேறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சிறைச்சாலை அதிகாரிகளை மாற்றி தமிழ் பேசும் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமெனவும் சிறைக்கைதிகளுக்கான உணவு சரியாக வழங்க வேண்டுமென்வும் சிறைக்கைதிகளின் மருத்துவ விடயங்களில் முழு அக்கறை செலுத்த வேண்டுமெனவும் கோரியே இவர்கள் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருகின்ற சிறைக்கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விடின் இது சாகும் வரையிலான உண்ணாவிரதமாக தொடருமென உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதியொருவர் கூறினார்.

இதுவரைகாலமும் பின்பற்றப்படாமலிருந்த சில நடைமுறைகளை பின்பற்றுமாறு அனைத்துச் சிறைச்சாலைகளுக்கும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினரால் கடந்த வாரம் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மட்டக்களப்புச் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் அனைவரும் ஒவ்வொரு பிரிவாகச் சென்று உணவை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நேற்று முன்தினம் அறிவுறுத்தப்பட்ட நிலையில் இதற்கு மறுப்புத் தெரிவித்த ஜி பிரிவிலுள்ள சுமார் 35 பேர் தங்களது இருப்பிடங்களுக்கு கொண்டு வந்து உணவை தர வேண்டுமெனக் கூறி கடந்த ஞாயிற்றுக்கிழமை உணவை பெற்றுக் கொள்ளவில்லை. இவர்களில் 6 பேர் நேற்றுக் காலையிலிருந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருவதாக மட்டக்களப்பு சிறைச்சாலையைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்ற கைதிகளுடன் சிறைச்சாலை அதிகாரிகள் சுமுகமாக பேசியும் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லையெனவும் அவ் அதிகாரி கூறினார். (அ-2)

# கச்சதீவை மீளப்பெற வேண்டிய தேவை தமிழக அரசுக்கு இல்லை

## அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறுகிறார்

(கொழும்பு).

இலங்கை- இந்திய அரசாங்கங்களின் பரஸ்பர இணக்கப்பாட்டுடன் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் கச்சதீவை மீளப்பெற வேண்டிய தேவை தமிழக அரசாங்கத்துக்கு இல்லையென சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருநாட்டு அரசாங்கங்களும் பரஸ்பரமான இணக்கப்பாட்டுடனேயே கச்சதீவு இலங்கைக்கு சொந்தமான தீவாக்கப்பட்டது. தற்பொழுது இதனை மீளப்பெறுவதற்கான முயற்சிகளில் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஈடுபட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாதது.

கச்சதீவை இந்திய மீனவர்கள் பயன்படுத்துவதற்காக அத்தீவை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நீதிமன்றத்தின் உதவியை நாடப்போவதாகக் கூறியிருப்பதை நியாயப்படுத்த முடியாது. அவ்வாறு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்வதாயிருந்தாலும் இருநாட்டு அரசாங்கங்களும் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்வுகாண வேண்டும்.

கச்சதீவு தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் சட்டவிரோதமானது எனக் கூறி கடந்த 2008 ஆம் ஆண்டு ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில் ஆட்சி மாற்றம் காரணமாக ஆட்சியை இழந்து மீண்டும் ஆட்சியிலிருக்கும் ஜெயலலிதா மீண்டும் இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் உதவியை நாடுவதற்குத் தீர்மானித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானமொன்றை அவர் எடுத்திருந்தார்.

கச்சதீவை மீளப்பெறுவதற்கு தமிழக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையானது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் விரிசலை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-2)

# சமாதான சகவாழ்வுக்கு மும்மொழி திட்டம் அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

ஐக்கிய இலங்கையின் சமாதான சக வாழ்விற்கு மும்மொழிக் கொள்கைத் திட்டம் அவசியமானது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அரச கருமமொழிகள் திணைக்களத்தின் முன்மொழிக் கொள்கைத் திட்ட புத்தக வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் ஏற்பட்ட போருக்கு ஒரு மொழிக் கொள்கையும் காரணமாக இருந்ததுடன் அந்த வகையில் கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் இந்த ஒரு மொழிக் கொள்கை நடைமுறையில் இருந்து வந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையின் கீழ் தற்போது இன்னமும் மொழிக் கொள்கைத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு வந்ததில் தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இத்திட்டத்தினூடாக பெரும்பான்மையினத்தவர்கள் தமிழ் மொழியையும் தமிழர்கள் சிங்கள மொழியையும் இலகுவாகக் கற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் இதனை சகலரும் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தற்போது இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி செயற்றிட்டங்கள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தென் இலங்கையின் சுதந்திரம் தங்கமென்றால் வட இலங்கையில் ஒருபோதும் தகரமாக இருக்க முடியாது என்றும் அமைச்சர் இதன்போது உறுதிபடத் தெரிவித்தார். (அ-2)



மன்னார் கத்தோலிக்க மக்களின் பாரம்பரிய கலை வடிவமான நாட்டுக் கூத்து நிகழ்வு மன்னார் முருங்கன் புனித யாகப்பர் ஆலயத்தில் அண்மையில் மேடையேற்றப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை மன்/ முருங்கன் பாடசாலை அதிபர் பா. சந்தியோவிற்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் நாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கை வரலாறு

44

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

## சீலமேகன்

மகிந்தன் மரணமானபோது, தக்கண தேசத்தின் ஆட்சியாளனான, மகிந்தனின் சொந்த மகனான அக்கபோதி அருகில் இருந்தான்.



அனுராதபுர ஆட்சிக்காலம்- சிதைவடைந்து காணப்படும் குளிக்கும் குளம்

அதனால் அவன் உடனடியாக அனுராதபுரம் ஆட்சிப் பொறுப்



2 ஆம் நூற்றாண்டுக்குரிய புத்தர்சிலை

பினைத் தனதாக்கிக் கொண்டான். எனினும் பட்சின தேசத்தின் ஆளுன ரான இன்னொரு அக்கபோதிக்குத் தகவல் அனுப்பி, உடன் வந்து யுவரா ஜாவாக அவனே ஆட்சிப் பொப்பை ஏற்க வேண்டுமென செய்தி அனுப்பி வைத்தான். அவனும் அவ்வாறே வந்து சீலமேகன் (அக்க போதி 6) என்ற சிம்மாசனப் பெயரோடு முடிதரித்துக் கொண்டான். மகிந்த னின் மகனான அக்கபோதியை யுவரா ஜாவகப் பட்டம் கட்டி அமர்த்தி னான். நான் அரச நிர்வாகத்தைக் கவனிக்கிறேன். நீங்கள் அரச பதவி யின் இனிமைகளை அனுபவியுங்கள் என அக்கபோதி இரண்டு கருத்துப் பட, சீலமேகனுக்குக் கூறினான். எனினும் இருவரும் வெகுகாலம் ஒற்றுமையாக இருந்தனர். அவர்களின் ஒற்றுமையைக் கலைக்க சில துஷ்டர்கள் சமயம் பார்த்திருந்தனர். அதற்கான திட்டம் ஒன்றி னையும் வகுத்தனர். சீல மேகவன்னிடம் சென்று நீங்கள் பெயருக்குத் தான் அரசனாக இருக்கிறீர்கள். ஆனால், உபராஜா அக்க போதியே மன்னனாகவுள் ளான். மக்களுடைய அன் பையும் ஆதரவையும் அவனே பெற்றுள்ளான். வெகு விரைவில் உங்களிடமிருந்து ஆட்சியைப் பறித்துக் கொள்வான்



அபயகிரி விகாரையில் உள்ள நடுகல்

என்றோதினர்.

சீலமேகன் அவற்றை நம்பினான். இதனை அறிந்த யுவராஜா அக்க போதி, உடனே தனது ஆளுமைக் குட்பட்ட தக்கிண தேசத்திற்கு ஓடிச் சென்றதுடன், மன்னனுக்கு எதிராகப் புரட்சிக்காரனாகவும் மாறினான். அங்கு படை திரட்டிக்கொண்டு மன்னனுக்கு எதிராக தண்டெடுத்தான். கடனிவத்தை என்றவிடத்தில் இரு சைன்யங்களும் மோதிக் கொண்டன.

யுத்தத்தில் அதிகம் சேதமடைந்த யுவராஜா அக்கபோதி, மலைய தேசத்திற்குத் தப்பிச் சென்றான்.

சீலமேகன், அதன்பின்னர் தனது மருமகனுக்காக மிகுந்த கவலை யடைந்தான். அக்கபோதியும் தானும் எவ்வளவு அன்பாகவும் பாசத்தோடும் இருந்தோம். இப்படியாகி விட்டதே? அக்கபோதி விரும்பியிருந்தால் ஆரம் பத்திலேயே ஆட்சியை ஏற்றிருக்க முடியும். தன்னை அழைத்து ஒப்ப டைத்திருக்கத் தேவையில்லை என கழிவிரக்கபட்டான். இவ்வாறே அக்கபோதியும் மனம் வருந்தினான். ஒருநாள் சீலமேகன் மலைய சத் திற்குச் சென்று, அக்கபோதியை அழைத்துக் கொண்டு அனுராத புரத்திற்கு மீண்டான். அத்தோடு தனது மகள் கங்கா என்பவளை அவனுக்கு மணம் முடித்து வைத்தான். இருவரும் வெகு அந்நியோன்யமாக வாழ்ந்த நாளில், ஒருநாள் அக்கபோதி ஏதோ ஒரு காரணமாகக் கோபமுற்று தன் மனைவி கங்காவைக் கன்னத்தில் அடித்துவிட்டான். அவள் தந்தை முன் சென்று கண்ணீர்விட்டு விம்மினாள். என் கணவன் என்னைக் கொல்லப் பார்க்கிறார் என்றாள். மன்னன், "அவ்வாறாயின் நீ அவனை விட்டு, பிக்குனிகள் மடத்திற்குச் சென்று பிக்குனியாகுக" என அவளை அங்கு சேர்த்துவிட்டான்.

## மானவர்மன் பரம்பரையினரின் ஆட்சி

இந்நிலையில், கங்கா மீது ஏற்க னவே காதல் கொண்டிருந்த அவளது மாமன் மகன், அவன் பெயரும் அக்க போதி. இதுவே தக்க தருணம், கங்காவைக் கவர்ந்து செல்வதற்கு என




எண்ணினான். அவ்வாறே அவளைக் கடத்திச் சென்றான். உடனே சீல மேகன், யுவராஜா அக்கபோதியுடன் உருகுணைக்கு சென்றான். கடத்திய அக்கபோதியை தண்டித்தல் நோக் கமாகவிருந்தது. ஆனால், யுவராஜா அக்கபோதி, தனக்குத் துரோக மிழைத்த அக்கபோதியை தண்டிக்க விரும்பினான். அதனால், மன்னன் உருகுணையை விட்டுவிட்டு, தனது மனைவியைக் கடத்திச் சென்ற வனைத்தேடி, மேற்குப்புற மலைப் பிராந்தியத்திற்குள் புகுந்தான். தனது படையுடன் தேடி அவனைப் பழி வாங்கிய பின்னர், தனது மனைவி யுடன் மீண்டான். அதன் பின்னர் மன்னன், யுவராஜா, கங்கா மூவரும் மகிழ்ச்சியாக வாழந்தனர்.

சீலமேகன் அனுராதபுரத்திலிருந்து ஆட்சி நடாத்தியபோது, யாழ்ப் பாணம் உள்ளடங்கலாக உத்தரதேசம் அவன் ஆட்சியின் கீழ் இருந்தது. கிரிநாகன் என்பவன் உத்திரதேசத் தைக் கைப்பற்றித் தனதாக்க முயன்ற போது, கிரிநாகனை சீலமேகமன்னன் அடக்கி, மீண்டும் உத்தரதேசத்தைத் தன் ஆணைக்குட்படுத்திக் கொண் டான் என்று சூளவம்சத்தில் கூறப்பட் டுள்ளது.

சீலமேகன், பல விகாரைகளைப் புனருத்தாரணம் செய்வித்தான். தானங்களாகக் கிராமங்களை விகாரை களுக்கு வழங்கினான். நாற்பதாவது ஆட்சியாண்டில் மரணமடைந்தான். அதன் பின்னர் யுவராஜா அக்கபோதி அனுராதபுரத்தின் மன்னனாக முடிசூடிக் கொண்டான். தனது மகன் மகிந் தனை யுவராஜா ஆக்கினான். போதி மரப் பழைய கட்டடத்தைத் திருத்து வித்தான். கலந்தா, மல்லவத்திகா ஆகிய மண்டபங்களை அமைப்பித் தான். புலந்திநகருக்குச் சென்று அடிக்கடி அங்கு தங்கி வருவது வழக் கம். அக்கால வேளையில் யுவராஜா வான மகிந்தன் மரணமடைந்தான். ஆட்சிக் காலத்தில் ஆறாமாண்டு அக்கபோதி மன்னனும் புலந்திநகரில் மரணமடைந்தான். அரசுரிமைக்கு ஒருவருமற்ற தேசமாக இலங்கை மாறியது.

(தொடரும்)



ஜேத்தவன விகாரை வெளிப்புறத்தில் செதுக்கபட்டிருக்கும் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோயை தடுக்கும் குணம் கொண்டது கறிவேப்பிலை

பொதுவாக கறிவேப்பிலை உணவில் வாசனையை தர பயன்படுகிறது என்று தான் அனைவருக்கும் தெரியும். அதனால் தான் என்னவோ சாப்பிடும்போது உணவில் கிடக்கும் கறிவேப்பிலையை எடுத்து கீழே போட்டு விடுகிறோம். இனிமேல் அப்படி செய்ய வேண்டாம். ஏனென்றால் கறிவேப்பிலை சாப்பிட்டால் புற்றுநோய் வராது என்று சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கறிவேப்பிலையில் கோயினிஜாக், குளூகோசைட், ஒலியோரெசின், ஆஸ்பர்ஜான் சொரின், அஸ்பார்டிக் அமிலம், அயாமைன், புரோலைன் போன்ற அமினோஅமிலங்கள் மற்றும் விற்றமின் ஏ, பி, சி, கல்சியம் போன்றவைகளும் உள்ளன. இதனால் பல்வேறு மருத்துவ குணங்கள் இருப்பதோடு நல்ல மணத்தையும் தருகிறது.

இத்தகைய குணங்கள் நிறைந்த கறிவேப்பிலை குறித்து அவுஸ்திரேலிய உணவியல் அறிஞர்கள் ஆய்வு செய்தனர். இதில் கறிவேப்பிலைக்கு புற்றுநோயை ஆரம்பத்திலேயே கொல்லும் ஆற்றல் உள்ளது என்று கண்டறிந்துள்ளனர். கறிவேப்பிலை சாப்பிடுவதால் இதய நோய் வராது. மேலும் ஞாபக சக்தியும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

மேலும் கறிவேப்பிலையையும் கடுகையும் தாளிக்க பயன்படுத்தினால் நன்மை உண்டா? என்று மருத்துவ குழுவினர் ஆராய்ந்தனர். அதில் கறிவேப்பிலையும் கடுகும் நமது திசுக்களை அழிவிலிருந்து பாதுகாக்கிறது என்றும் பிரிரேடிக்கல்ஸ் உருவாவதை தடுக்கிறது என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

பிரிரேடிக்கல்ஸ் உருவாவதால் தான் டி.என்.ஏ.பாதித்து செல்களிலுள்ள புரோட்டின் அழிந்து அதன் விளைவாக புற்றுநோய், வாத நோய்கள் வருகின்றன என்றும் கண்டறிந்துள்ளனர்.


இதுதவிர நீரிழிவு நோயாளிகள் தினமும் கறிவேப்பிலை இலையை மென்று சாற்றை



விழுங்கி வந்தால் மாத்திரை சாப்பிடும் அளவு பாதியாக குறையும் என்றும் மருத்துவர்கள் கூறுகிறார்கள். இனி கறிவேப்பிலையை உணவில் இருந்து தூக்கியெறியாமல் மென்று விழுங்குவோம்.

## உடல் எடையை குறைக்கும் வெந்தயம்

கோடைகாலம் ஆரம்பித்த நிலையில் உடல் வெப்பமும் அதிகரித்து விட்டது. அப்போது வெந்தயத்தை அதிகம் சாப்பிடுவோம். ஏனென்றால் வெந்தயம் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும் என்பதால். இதற்கு இன்னொரு குணமும் இருக்கிறது. அது என்னவென்



றால் வெந்தயம் உடல் எடையையும் குறைக்கும் என்பதாகும்.

இதனை சாப்பிடுவதால் உடலை வருத்தி உடற்பயிற்சியை செய்யாமல் எளிதாக எடையை குறைக்கலாம். வெந்தயத்தில் நார்ச்சத்து அதிகமாகவும் கலோரி குறைவாகவும் உள்ளது. இதில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் இரத்த கொதிப்பு மற்றும் உடலில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்துகிறது.

மேலும் வெந்தயத்தில் காபோவைதரேற்று குறைவாக உள்ளதால் எடை அதிகரிக்க வழி இல்லை மற்றும் உடலில் கலோரி குறைவாக இருந்தாலும் எடை அதிகரிக்காது.

இரவில் ஒரு ஸ்பூன் வெந்தய விதையை நீரில் ஊற வைத்து காலையில் சுடுதண்ணீரில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடலில் உள்ள நச்சுப்பொருளை வெளியேற்றுவதோடு உடல் எடையையும் குறைக்கும். வெந்தய விதையை சாதாரண தண்ணீரில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடலில் உள்ள கொழுப்புகளைக் கரைப்பதோடு ஜீரண சக்தியும் கூடும்.

வெந்தய விதையை பொன்னிறமாக வறுத்து அதை பொடியாக்கி காற்று புகாத ஒரு டப்பாவில் வைத்து உண்ணும் உணவில் கலந்து சாப்பிடலாம். வெறும் வயிற்றில் தேநீருடன் வெந்தயப் பொடியை கலந்து சாப்பிடலாம். இதனால் அடிக்கடி பசி ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும்.

## இதயம் மற்றும் எலும்பின் நலனுக்கு சிறந்தது ஓட்ஸ்

ஓட்ஸ்-ல் குறைந்த அளவு கொழுப்பு மற்றும் உப்பு உள்ளது. ஓட்ஸ்-ல் இயற்கை இரும்புச் சத்து அதிகம் உள்ளது. சுண்ணாம்புச் சத்தும் அதிகம் உள்ளதால் இதயம், எலும்பு மற்றும் நகங்களுக்கு நல்லது. இதில் கரையக்கூடிய நார்ப்பொருள் உள்ளது. அரை கப் சமைத்த ஓட்ஸ்-ல் கிட்டத்தட்ட



4 கிராம் கூழ்ம நிலை கரையக்கூடிய நார்ப்பொருள் உள்ளது.

இந்த நார்ப்பொருள் இரத்தத்தில் உள்ள எல்.டி.எல்.கொலஸ்ரோல் எனப்படும் உடலுக்கு கேடுவிளைவிக்கும் கொழுப்புப் பொருளை குறைக்க உதவுகிறது. ஓட்ஸ் உடலிலுள்ள உபரி கொழுப்புப் பொருளை உறிஞ்சி வெளியேற்றுகிறது. இது மலச்சிக்கலை குணப்படுத்துகிறது. ஏனெனில் அதிக கரையக்கூடிய நார்ப்பொருள் வயிறு, குடல் செயல்களை ஒழுங்கு செய்ய உதவுகிறது. அதிக ஓட்ஸ் கொண்ட உணவு இரத்தத்தில் உள்ள சீனியின் அளவினை நிலைப்படுத்துகிறது.

நரம்பு சம்பந்தமான கோளாறுகள் குறைய ஓட்ஸ் உதவுகிறது. ஓட்ஸ் பெண்களில் மாதவிடாய் நிற்கும் காலங்களில் ஏற்படும் கருப்பை மற்றும் கருவகத்தில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க உதவுகிறது. ஓட்ஸ்-ல் சில தனிப்பட்ட கொழுப்பு அமிலம் உண்டு. இவை விற்றமின் ஈ உடன் இணைந்து உடல் திசுக்களில் ஏற்படும் சிதைவினை தாமதிக்கிறது மற்றும் புற்றுநோயால் ஏற்படும் அபாயத்தினை குறைக்கிறது.

## உடலுக்கு அழகைக் கொடுக்கும் கரட்


பொதுவாக காய்கறிகளும் பழங்களும் சாப்பிட்டால் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால், அத்தகையவற்றால் உடல் மட்டும் ஆரோக்கியமாவதில்லை. உடலும் அழகுடன் மின்னும். அதிலும் காய்கறிகளில் கரட் மிகவும் சிறந்த ஒன்று. அது சாப்பிட்டால் கண்களுக்கு மிகவும் ஏற்றது. அதேபோல் சருமத்திற்கும் அழகைத் தருகிறது.

மேலும் சமீபத்தில் பழங்கள் மற்றும் காய்கள் சாப்பிட்டால் உடல் ஆரோக்கியமாகவும் அழகாகவும் இருக்கிறதா என்று ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் இவற்றை சாப்பிட்டால் ஆண், பெண் என்ற எந்த ஒரு வித்தியாசமும் இல்லாமல் சருமம் அழகு பெறும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதிலும் தொடர்ந்து இரண்டு மாதங்கள் காய்கறிகள் மற்றும் பழங்களை மட்டும் சாப்பிட்டு வந்தால் கண்டிப்பாக உடல் எடை குறைந்து சருமம் அழகாக இருப்பது நன்கு தெரியும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதுமட்டுமல்லாமல் கரட்டை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று பட்டியலிட்டுள்ளனர். அதைப் படித்து பின்பற்றி பாருங்கள்.

❖ உடல் மற்றும் சருமம் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உடலில் சரியான செரிமான சக்தி இருக்க வேண்டும். அதற்கு தினமும் உணவு உண்ட பின் ஒரு கரட்டை சாப்பிட வேண்டும். இதனால் வாயில் உமிழ்நீர் சுரப்பு அதிகரித்து உடலில் இருக்கும் கிருமிகள் அழிந்து விடுவதோடு உடலில் செரிமான சக்தியும் அதிகரிக்கும்.

❖ இரண்டு கரட்டை எடுத்து அதனை வேக வைத்து மசித்து முகத்திற்கு தடவ வேண்டும். பின்னர் அதனை காய வைத்து முகத்தில் இருந்து உரித்து எடுக்க வேண்டும். அதன்பின் வெதுவெதுப்பான நீரால் முகத்திற்கு ஒத்தடம் தர வேண்டும். இவ்வாறு



வாரத்திற்கு இருமுறை செய்தால் முகம் நன்கு பொன்னிறமாக மின்னும்.

❖ கரட்டில் சீனி சேர்த்து நன்கு இலகுவாகவும் கெட்டியாகவும் அரைத்துக் கொள்ள வேண்டும். பின் அதனை முகத்திற்கு தடவி சிறிது நேரம் மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்திற்கு சரியான இரத்த ஓட்டம் இருக்கும். மேலும் இதில் இருக்கும் பொட்டாசியம், முகத்தில் இருக்கும் இறந்த செல்கள், முகப்பரு, கரும்புள்ளி மற்றும் ஏனைய சரும நோய்களை நீக்கி சருமத்தை மென்மையாகவும் அழகாகவும் வைக்கும்.

❖ தினமும் ஒரு டம்ளர் கரட் ஜூஸை பருகினால் சருமத்தில் எந்த நோயும் ஏற்படாமல் இருக்கும். அதுமட்டுமல்லாமல் முகச் சுருக்கம் ஏற்படாமலும் தடுக்கும்.

ஆகவே கரட்டை தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். இதனால் எந்த ஒரு கெமிக்கல் கலந்த அழகுப் பொருட்களையும் வாங்கி பயன்படுத்தத் தேவையில்லை என்றும் கூறுகின்றனர்.

Health Care

# மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

## உடல் நலத்தைப் பேணும் தயிர்

நாம் அன்றாடம் நம் இல்லத்தில் பயன்படுத்தும் உணவு பண்டங்களின் தயிரும் ஒன்று. ஒரு ஊட்டச்சத்து மிகுந்த மற்றும் தனிப்பட்ட உடல் நலத்தை பேணும் ஆதாயங்கள் கொண்டவை. ஒரு கை நிறைய தயிரை எடுத்து தலையில் நன்றாக தேய்த்தால் தூக்கம் நன்றாக வரும்.

தயிரில் உள்ள புரோட்டீன் பாலில் உள்ள



புரோட்டீனை விட சீக்கிரமாகவே ஜீரணமாகிவிடும். தயிர் நம் உடலுக்கு ஒரு அருமருந்து. குளிர்ச்சியைத் தரும். நல்ல ஜீரண சக்தியை தருவது தயிர்தான். பால் சாப்பிட்டால் ஒரு மணி நேரம் கழித்து 32% பால்தான் ஜீரணமாகியிருக்கும். ஆனால், தயிர் சாப்பிட்ட ஒரு மணி நேரத்தில் 91% உடனே ஜீரணிக்கப்பட்டிருக்கும்.

பாலைத் தயிராக மாற்றும் பக்றீரியா குடலில் உருவாகும் நோய்க்கிருமி பக்றீரியாவின் வளர்ச்சியை தடுக்கிறது. தயிரில் இருக்கும் பக்றீரியா ஜீரண சக்தியை அதிகரிக்கும் நன்மை செய்யும் பக்றீரியாவை உருவாக்குகிறது. பாலில் LACTO இருக்கிறது. தயிரில் இருப்பது LACTOBACIL. இது ஜீரண சக்தியை தூண்டி வயிற்றின் உபாதைகளை சரி செய்கிறது.

வயிறு சரியில்லாத பொழுது வெறும் தயிர் சோறு மட்டுமாவது உணவாக உட்கொள்ளச் சொல்லி மருத்துவர்கள் சொல்வார்கள். அதிகமாக வயிற்று போக்கு ஏற்படும் பொழுது வெந்தயமும் தயிரும் சேர்த்து ஒரு கப் சாப்பிட்டால் வயிற்று பொருமல் அடங்கும். பிரியாணி போன்று உடலுக்கு சூடு தரும் உணவு வகைகளை சாப்பிடும் பொழுது வயிற்றுக்கு அதிகம் கேடு விளைவிக்காமல் இருக்கத்தான் தயிர் சாப்பிடுகிறோம்.

மெனோபாஸ் பருவத்தை எட்டப்போகும் பெண்களுக்கு தயிர் மிகவும் உபயோகமாகிறது. உடலுக்குத் தேவையான அதிக கல்சியத்தை தயிர் வழங்குகிறது. வெண்ணெய் காய்ச்சி இறக்கும் பொழுது சிறிது தயிர் சேர்த்தால் நெய் வாசமாக இருக்கும்.

புளித்த தயிரை தலையில் தேய்த்து சுத்தம் செய்தால் தலை முடி மிருதுவாக இருக்கும். தயிர் புளிக்காமல் 2 தொடக்கம் 3 நாட்கள் இருக்க தேங்காய் சிறிய துண்டாக்கி சேர்த்தால் புளிக்காது. வெண்டைக்காய் வதக்கும் பொழுது ஒரு ஸ்பூன் தயிர் சேர்த்தால் நிறம் மாறாமல் பிசுபிசுக்காமல் இருக்கும்.

வாழைப்பூ, வாழைத்தண்டு இவற்றை தயிர் கலந்த நீரில் போட்டு வைத்தால் நிறம் மாறாது. மண்ணெண்ணெய் வாசம் போக தயிர் கொண்டு கை கழுவலாம். மோராக கடைந்து உப்பு, கொத்தமல்லி, கறிவேப்பிலை, பெருங்காயம் சேர்த்து நீர் மோராக்கி குடிக்கலாம். தயிருடன் சர்க்கரை சேர்த்து கலக்கி உண்ணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முதலமைச்சர் பதவிக்கு கட்சிகளிடையே கடும் போட்டி

## யாருக்கு அந்த அதிர்ஷ்டம்?

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை கைப்பற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள முஸ்லிம் கட்சிகள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு இடையிலான போட்டி தீவிரமடைந்துள்ளது.

கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரசும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரசும் அமீர் அலியை முதலமைச்சராக்க வேண்டுமென கோருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரான அமீர் அலி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை தனது கட்சியின் தூதுக்குழுவொன்று நேற்று முன்தினம் சந்தித்து முதலமைச்சர் பதவியை கோரியதாக பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கூறினார்.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் இது தொடர்பாக எம்முடன் புரிந்துணர்வுக்கு வந்துள்ளது. நாம் கோரிக்கையை முன்வைத்தோம். இது தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கூறினார்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# கீழைத்தேய நாடுகளுடன் நல்லுறவைப் பேணுங்கள்

## அல்ஜசீராவின் முன்னாள் தலைவர்

(கொழும்பு)

இலங்கை தமது உறவுகளை மேற்குலக நாடுகளில் இருந்து கீழைத்தேய நாடுகளின் பக்கம் திருப்ப வேண்டும் என்று இலங்கைக்கு வருகை தந்த அல்ஜசீரா ஊடகத்தின் முன்னாள் தலைவர் வடா கான்பர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

தெற்காசிய நாடுகளை பொறுத்தவரையில் இலங்கையில் சீனாவைப் போன்று மத்தியில் ஒரு ஆட்சியதிகாரம் இருப்பதை அந்த நாடுகள் விரும்பவில்லை என்றும் கான்பர் இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையில் மதத்தையும் அரசியலையும் கலக்கக்கூடாது என்று கான்பர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இதன் காரணமாக தேவையற்ற சமூக அதிருப்தி நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார். (அ-2)

# மிருகங்கள் பரிமாற்ற அடிப்படையில் மிருகக்காட்சிசாலைக்கு மேலும் மிருகங்கள்

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்கு இம்மாத இறுதிக்குள் புதிதாக ஒரு சோடி கொமொடோ ட்ரகனும் (கபரகொய்யா) இரண்டு சோடி பென் குயின்களும் கொண்டு வரப்படவிருப்பதாக அதன் பணிப்பாளர் அநுர டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடுகளுக்கிடையிலான மிருகங்களின் பரிமாற்ற அடிப்படையிலேயே செக் குடியரசு ஒரு சோடி கொமோடோ ட்ரகன்களையும் ஜப்பானிய அரசாங்கம் நகுவா மாநிலத்திலிருந்து இரண்டு சோடி பென்குயின்களையும் இலங்கைக்கு வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மேற்படி உயிரினங்களை இலங்கைக்கு எடுத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில் குளிருடன் கூடிய காலநிலை ஆரம்பிக்கும் வரையே நாம் அதனை பிற்போட்டிருந்தோம். எனவே வெகு விரைவில் இம்மாத இறுதிக்குள்ளாக இவை தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்கென கொண்டு வரப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# விபத்தில் சிக்கி மூவர் படுகாயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் வடமராட்சி குஞ்சர் கடைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை வி.எம். வீதியினை சேர்ந்த மோட்டார் சைக்கிளில் வந்த சிங்கரத்தினம் பரமகுரு (வயது 60), சாதுமலன் பரமகுரு ரவிவண்ணன் (வயது 20), கரணவாய் மூத்த விநாயகர் பகுதியினை சேர்ந்த தங்கராசா கபில்ராஜ் (வயது 17 ) ஆகிய மூவருமே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (அ-11-24)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.09 18

★1502-கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவதும் கடைசியுமான கடற் பயணத்தின் போது கொஸ்டா ரிக்காவில் தரையிறங்கினார்.

★1502-புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பேர்டினண்ட் பிரான்ஸ் மீது போர் தொடுத்தான்.

★1739-பெல்கிரேட் நகரம் ஒட்டோமான் பேரரசிடம் கையளிக்கப்பட்டது.

★1759-கியூ பெக் நகரை பிரித்தானியர் கைப்பற்றினர்.

★1809-லண்டனில் ரோயல் ஒப்பரா மாளிகை திறக்கப்பட்டது.

★1810-சிலியில் முதலாவது அரசு (junta) அமைக்கப்பட்டது.

★1812-மொஸ்கோவில் பரவிய தீ நகரின் முக்கால் பகுதியை அழித்து விட்டு அணைந்தது. பெட்ரொவ்ஸ்கி அரண்மனையில் இருந்து நெப்போலியன் கிரெம்ளினுக்கு வந்தான்.

★1851-நியூயோர்க் டைம்ஸ் இதழ் முதன் முதலில் வெளியிடப்பட்டது.

★1895-புக்கர் டி. வோஷிங்டன் தனது புகழ் பெற்ற அட்லாண்டா மத்திய ஸ்தம் என்ற சொற்பொழிவை ஆற்றினார்.

★1911-ரஷ்யப் பிரதமர் பீற்றர் ஸ்டோர்லிப்பின் கீவ் ஒப்பரா மாளிகையில் சுடப்பட்டார்.

★1914-முதலாம் உலகப் போர்: தென்னாபிரிக்கப் படைகள் ஜேர்மனியின் தென் மேற்கு ஆபிரிக்காவில் தரையிறங்கினர்.

★1919-நெதர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★1922-உலக நாடுகள் அணியில் ஹங்கேரி இணைந்தது.

★1924-மகாத்மா காந்தி இந்து- முஸ்லிம் ஒற்றுமைக்காக 21 நாட்களில் உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

★1932-நடிகை பெக் எண்ட்விசில் ஹொலிவுட் சின்னத்தின் H எழுத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

★1934-சோவியத் ஒன்றியம் உலக நாடுகள் அணியில் இணைந்தது.

★1943-இரண்டாம் உலகப் போர்: பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் சொபொபோர் என்ற இடத்தில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★1943-இரண்டாம் உலகப் போர்: டென்மார்க் யூதர்களை வெளியேற்ற ஹிட்லர் உத்தரவிட்டார்.

★1944-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய நீர்மூழ்கிக் கப்பல் ஜப்பானின் ஜூனியோ மாரு என்ற கப்பலைத் தாக்கியதில் டச்சு அவுஸ்திரேலிய பிரித்தானியப் போர்க்கைதிகள் உட்பட 5 ஆயிரத்து 600 பேர் கொல்லப்பட்டனர்.

★1959-வன்கார்ட் 3 பூமியைச் சுற்றிவர அனுப்பப்பட்டது.

★1961-ஐ.நாவின் பொதுச் செயலர் டாக் ஹமாஷெல்ட் கொங்கோவில் அமைதிக்கான பேச்சுவார்த்தையில் பங்கேற்ற போது விமான விபத்தில் உயிரிழந்தார்.

★1962-ருவாண்டா, புரண்டி, ஜமெய்க்கா ஆகியன ஐ.நா.வில் இணைந்தன.

★1968-இந்திய உளவுத்துறை நிறுவனம் றா அமைப்பு உருவாக்கப்பட்டது.

★1972-இடி அமீனினால் விரட்டப்பட்ட முதல் தொகுதி உகண்டா மக்கள் ஐக்கிய இராச்சியத்தை வந்தடைந்தனர்.

★1974-சூறாவளி ஹொண்டுராசைத் தாக்கியதில் 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★1976-பீஜிங் நகரில் மாசே துங்கின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

★1977-வொயேஜர் 1 பூமியையும் சந்திரனையும் சேர்த்துப் படம் எடுத்தது.

★1980-சோயுஸ் 38 கியூபாவைச் சேர்ந்த விண்வெளி வீரருடனும் ஒரு ரஷ்யருடனும் விண்வெளி சென்றது.

★1982-லெபனானில் கிறிஸ்தவத்துணை இராணுவத்தினர் 600 பாலஸ்தீனரைக் கொன்றனர்.

★1988-பர்மாவில் அரசியலமைப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. மக்களாட்சிக்கு ஆதரவானோர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். 8888 எழுச்சி முடிவுக்கு வந்தது.

★1990-லிக்டன்ஸ்டைன் நாடு ஐ.நா.வில் இணைந்தது.

★1997-50.3 வீதம் வேல்ஸ் மக்கள் சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

★2006-கிழக்கிலங்கை அம்பாறையில் 11 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★1709-சாமுவேல் ஜோன்சன், ஆங்கில எழுத்தாளர் (இ.1784)

★1819-லியோன் ஃபோக்கோ, பிரெஞ்சு இயற்பியலாளர்

### இறப்புக்கள்

★1180-ஏழாம் லூயி, பிரான்சின் மன்னன் (பி.1120)

★1783-லியோனார்டு ஆய்லர், சுவிற்சர்லாந்து கணிதவியல் அறிஞர் (பி.1707)

★1945-இரட்டைமலை சீனிவாசன், ஆதி திராவிடர் இயக்கத் தலைவர் (பி. 1859)

★1961-டாக் ஹமாஷெல்ட், சுவீடனைச் சேர்ந்த ஐ.நா. பொதுச் செயலர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1905)

★1967-ஜோன் கொக்ரொஃப்ட், பிரித்தானிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1897)

★1978-ஆபிரகாம் கோவூர், பகுத்தறிவாளர் (பி.1898)

### ஆபிரகாம் கோவூர்



ஆபிரகாம் கோவூர் பகுத்தறிவாளர் ஆவார். இவர் உளவியலாளர், எழுத்தாளர், ஆசிரியர் ஆகிய பணிகளில் சிறந்து விளங்கினார்.

**வாழ்க்கைக் குறிப்பு**

இவர் கேரளாவில் திருவள்ளா என்னுமிடத்தில் 1898 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி மார் தொம்மா சிரியன் திருச்சபையின் தலைவரான கோவூர் ஈய்ப்பெ தொம்மா காத்தனாரின் மகனா கப் பிறந்தார். இலங்கையில் பல பாடசாலைகளில் தாவரவியல் ஆசிரியராகப் பணியுரிந்து கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியிலிருந்து 1959 இல் பணி ஓய்வு பெற்றார்.

**பகுத்தறிவுப் பணி**

ஆவி, பிசாசு தொடர்பாகக் கூறப்பட்ட எல்லாவகை விந்தை நிகழ்வுகளையும் அரை நூற்றாண்டுக்கும் மேல் முழுவதுமாக ஆராய்ந்தவர். ஆவி, பேய் ஆகியவை தொடர்பான ஆற்றல்கள் பெற்றுள்ளதாகக் கூறுகின்ற எல்லோரும் ஒன்று ஏமாற்றுக்காரர்களாக இருக்க வேண்டும் அல்லது மூளைக் கோளாறோ, மனநோயோ கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவரின் உறுதியான கருத்தாகும்.

**கண், உடல் தானம்**

எனக்கு சாவைக் கண்டு அச்சமில்லை. எனவே என்னை புதைக்க வேண்டாம் என்று தன் உயிலில் எழுதி வைத்த கோவூர் தன் கண்களை ஒரு கண் வங்கிக்குத் தானமாக அளித்தார். தன் உடலை மருத்துவக் கல்லூரிக்கு ஆய்வுக்காகவும் தன் எலும்புக்கூடு தற்சுட்டன் கல்லூரியின் அறிவியல் ஆய்வகத்திற்கு அளிக்கப்பட வேண்டும் என்று எழுதியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ், ஆட்சியமைக்க அரசுக்கு ஆதரவளிப்பது சுய அரசியல் தற்கொலைக்கொப்பு

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து ஒரு வாரம் கடந்துவிட்ட நிலையிலும், முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தெளிவான முடிவு எடுப்பதில் காலதாமாவது குறித்து பல்வேறு கருத்துக்கள் எதிர்வு கூறப்பட்டு வருகின்றன. ஆயினும் முக்கியத்துவமான அந்த அரசியல் முடிவினை எடுப்பதற்கு மு.கா. தலைமை எந்த அவசரமும் இல்லாது, காலமெடுத்து முடிவுக்கு வருவதில் தவறில்லை.

ஆனால், எடுக்கப்படுகின்ற முடிவு முஸ்லிம்மக்கள், மு.கா. இன் உருவாக்கத்தின்பின், கடந்த 25 வருடங்களாக நடைபெற்ற, எல்லாத் தேர்தல்களிலும் அக்கட்சிக்கு தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற மக்கள் ஆணைக்கு விசுவாசமாகவும், கடந்த மாகாண சபைத் தேர்தலில் மு.கா. தலைமை கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் செய்த தேர்தல் கால பரப்புரைகளுக்கு முழுப் பொறுப்பனையும் ஏற்கும் வகையில், அதன் முடிவு இருப்பது மட்டுமே அவசியமானதும் முக்கியத்துவமானதுமாகும். இதனையே மு.கா. இற்கு வாக்களித்த மக்களும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

மு.கா.தலைமை இதுவரை, தான் முஸ்லிம் மக்கள் சார்பில், என்ன அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து பேரம்பேசலில் ஈடுபட்டு வருகிறது என்பதை அறிவிக்கவில்லை. அரசுடன் பலகட்ட பேச்சவார்த்தைகள் ஜனதிபதி மாளிகை தொடக்கம் நட்சத்திர விடுதிகள்வரை நடந்துவிட்டன; நடந்தும் வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சம்பிரதாயமாகக்கூட, பேச்சுவார்த்தையை மு.கா. தொடங்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்போ மு.கா.வை மன்றாட்டமாக அழைத்துக் கொண்டிருக்கிறது. மு.கா. அரசாங்கத்துடன் நேரத்தைக் கடத்துவதில் இருந்து, அரசுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதில் அதற்குள்ள ஆர்வமும் விருப்பமும் முதல் தேர்வும் வெளிப்படுகிறது.

என்ன காரணத்திற்காக முஸ்லிம் காங்கிரசுக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்லில் மக்கள் வாக்களிக்க வேண்டுமென மு.கா. தலைமை முஸ்லிம் மக்களுக்குள் கோரிவந்ததோ, அவைகளை மறந்துவிட்டு மிகப் பரம இரகசியமாக அரசாங்கத்துடன் பேசி வருவது தொடர்கிறது.

மர்மங்களும் திகைப்பூட்டும் திருப்பங்களும் மிக்க பேச்சு வார்த்தை அணுகுமுறையானது, கட்சிக்கு வாக்களித்த மக்களையும் கட்சியின் கிராம தலைமைகளையும், அதன் தீவிரமான ஆதரவுத் தளத்தையும், கட்சி தலைமைக்கு நெருக்கமான ஓரிரு அரசியல்பீட உறுப்பினர்கள் அனைவரையும் இருட்டுக்குள் வைத்துள்ளது. இதன் காரணமாகவே, மு.கா. இன் தீவிர ஆதரவுத் தளமே, என்ன முடிவு எடுக்கப்படும் என தெரியாது பல்வேறு யூக முடிவுகளை சொல்ல வேண்டிய நிலைக்கு தள்ளி விடப்பட்டுள்ளது.

இன்றைய இலங்கை அரசாங்கத்தின் நிலை, இலங்கை முஸ்லிம் மக்களது இனத்துவம், அரசியல் மத கலாசார பண்பாட்டு, பொருளாதார, இருப்பிற்கும் நலனுக்கும் அச்சுறுத்தலானது என்பது மிக வெளிப்படையானது.

இந்த மாகாண் சபைத் தேர்தலின் பின் ஏற்பட்டுள்ள நிலையை அரசியல் ரீதியாக விளங்க முற்படுவது அவசியமானது. அளவிற்கு அதிகமான மதிப்பீடுகளுடன் காரியமாற்றுவதோ, செய்ய வலிமையுள்ள விடயங்களை செய்யத் தவறுவதோ நடந்துவிடக் கூடாது. அரசாங்கத்திற்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் ஆட்சியமைப்பதில் உள்ள அவசரத்தேவை, முஸ்லிம் காங்கிரசுக்கு இல்லை. மு.கா. இந்த தேர்தலில் இரு தரப்பினருக்கும் பயன்பாட்டு தேவைக்கு வேண்டிய அரசியல் பிரதிநிதித்துவத்தை கைவசம் வைத்துள்ள ஒரு அரசியல் இயக்கம். கிழக்கு மாகாணத்தில் ஒரு கூட்டு மாகாண அரசமைக்க மு.கா. இன் அரசியல் பலம் பக்கபலமாக தேவையாக இருக்கிறது.

அதிகாரமும் ஆளும் தலைமையும் முஸ்லிம் காங்கிரஸ் வசம் தனித்து வரப் போவதில்லை. மு.கா.தலைமை இத் தேர்தல் மூலம் அடையக் கூடிய அரசியல் இலக்கு இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக மற்றும் அனைத்து உரிமை, திட்டத்தினை வகுப்பதே ஆகும்.

முஸ்லிம்களுக்குள் அமைச்சர்களாக உள்ள, மு.கா. தலைவர் மற்றும் மு.கா. பிரதி அமைமச்சர் நீங்கலாக மற்றவர்கள் பௌதீக அபிவிருத்தி, மற்றும் தொழில் வாய்ப்பு விடயங்களில் முடியுமானதை மக்களுக்கு செய்துதான் வருகிறார்கள். அவர்கள் தங்களையோ அல்லது தமது கட்சியையோ முஸ்லிம் மக்களின் உரிமையைப் பெற்றுத்தர உறுதி கொண்ட அரசியல் வழிமுறையில் போராட்ட உணர்வுள்ளவர்களாக வெளிப்படுத்துவதில்லை. ஆனால் மு.கா.இன் தாரக மந்திரம், அரசியல் மூலதனம், முஸ்லிம் மக்களின் உரிமைப்போராட்டத்தினை முன்னெடுப்பதேயாகும்.


மு.கா. இன் வாக்கு ஆதரவுத்தள மக்களின் உணர்வும் எதிர்பார்ப்பும் முஸ்லிம் இனத்துவ அரசியல் உரிமை சார்ந்ததே.

கிழக்கு முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் அரசியல் உரிமை சார்ந்த எந்த விடயத்தினையும் அரசுடன் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத நிலையில், ஆட்சி அமைப்பதற்கான அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஒரு சில பதவிகளுக்காக மட்டுமே வழங்கி அரசுக்கு ஆதரவு வழங்க மு.கா. முன்வருமானால், இந்த முடிவு அதன் சுய அரசியல் தற்கொலைக்கு வழி அமைப்பதுடன், முஸ்லிம்களின் உரிமை, இனத்துவப் பாதுகாப்புத் தொடர்பான காப்பீடுகளுக்கு முஸ்லிம் மக்கள், எதிர்காலத்தில் தமக்குள் புதிய அரசியல் சக்திகளை இனம் காணவேண்டிய நிலைக்கும், அவற்றிற்கான தோற்றத்திற்கும் வழி வகுக்கும். இது அரசியலில் தவிர்க்க முடியாத இயங்கு விதியாகும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் மு.கா. தலைமை கூட்டு அரசாங்கம் அமைப்பது, மாகாணத்தை நிர்வகிப்பதிலும், தீர்மானங்களை எடுப்பதிலும் அமுல்படுத்துவதிலும் மு.கா.இற்கு முக்கிய பாத்திரத்தினை உச்ச அளவில் உறுதி செய்யும். முஸ்லிம் மக்களின் கிழக்கு அரசியல் பலமும், தனித்துவமும் உறுதிப்படுத்தப்படுவதடன், சர்வதேசிய அளவில் முஸ்லிம்களின் தவிர்க்கமுடியா பங்களிப்பு அதிக கவனத்திற்கு வரும். இதில் ஒரு கூட்டு அரசுக்குரிய அனைத்து மதிப்பும் ஈடுபாடும் இருக்கும்.

ஆனால், கூட்டரசாங்கம் ஆனது முரண்பாடுகளை [illegible] நேரம் அவற்றினை தீர்ப்பதற்கான எந்த வேலைத்திட்டமும் அற்ற சந்தார்ப்பவாத கூட்டாகவே இருக்கும். தமிழர்களும் முஸ்லிம்களும் இலங்கை மைய அரசால், நீண்டகாலமாய் ஒடுக்கப்படுகின்ற இரு தனித்தேசிய இனங்களாக இருந்தாலும், தனித்த பிரச்சினைகளும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் இடையே இனரீதியான பகை முரண்பாடும், கடந்தகால கசப்பான அனுபவங்களும், வளங்களைப் பகிர்ந்துகொள்வதில் போட்டா போட்டியும் உள்ளன. முதலில் இவை தொடர்பாகவும், இரு தேசிய இனங்களும் அரசியல் மற்றும் இனத்துவ ரீதியாக சேர்ந்து வேலை செய்வதில் உடன்பாடு காணப்படல் வேண்டும். ஆட்சியமைத்துவிட்டு இவற்றை செய்வோம் என்று சொல்வது, முரண்பாடுகளை மேலும் வளர்க்கவே வழிவகுக்கும்.

ஆட்சி அமைப்பதற்காகவும் இலங்கை அரசுக்கு உடனடி எதிர்வினையாகவும் கூட்டணி அமைப்பது, சந்தர்ப்பவாதமும், அரசியல் பொறுமை அற்ற அரசியல் செயற்பாடாகவுமே அமையும்; நாளை உண்மையாக புரிந்துணர்வுடன், சமூக சமத்துவத்தினை அவாவி நிற்கின்ற, இரு தேசிய இனங்களுக்கு இடையே அமையவேண்டிய கூட்டு முன்னணியை-மேற்படி சந்தர்ப்பவாத, அவசர திருமணத்திற்கு ஒப்பான செயல்-தடுத்துவிடும்.



கூட்டமைப்பு தலைமை, முஸ்லிம் தொடர்பாக அண்மைக் காலமாக வெளிப்படுத்தி வருகின்ற கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்தால் வரவேற்கக் கூடியதும், நம்பிக்கையை தரவல்லதாகவும் உள்ளது. தற்போதைய த.தே.கூ தலைவரின் காலகட்டத்தினுள் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நம்பிக்கையான அரசியல் எதிர்காலம் ஒன்று கட்டி எழுப்பப்படல் வேண்டும். அதற்கான வேலைத்திட்டத்தினை இப்போதிருந்தே செய்ய வேண்டும்.

எம்.பௌசரின் பத்தியில் இருந்து குறித்த பகுதி

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் தமிழ் மக்களின் அபிலாசைக்கு மாற்றாக முடிவு எடுக்கமாட்டோம் என தெரிவித்துள்ளார். அத்துடன் கிழக்கு தேர்தலில் மு.கா. இற்கு கிடைத்த வாக்குகள் அபிவிருத் திக்கும், அமைச்சுப் பதவிகளுக்கும் கிடைத்ததல்ல. அப்படியானால், இருக்கும் ஒரேவழி முஸ்லிம் காங்கிரஸ் யாருக்கும் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்காமல், சுயாதீனமாக கிழக்கு மாகாணசபையில் செயற்படுவதுதான்.

ஆட்சி அமைக்கும் காய்நகர்த்தல் அரசியல் விளையாட்டில் பங்காளியாகாமலும், பலியாகாமலும் இருந்த கொண்டு, முஸ்லிம்களின் நலன்களுக்கும் உரிமைகளுக்கும் சாதகமான தீர்மானங்களை கிழக்கு மாகாண சபையில் முன்மொழிதல், அவற்றினை தீர்மானங்களாக கொண்டுவருவதுடன், பிற [illegible] தீர்மானங்களை கொண்டு வருகின்றபோது சமூக நலனை முன்னிறுத்தி ஆதரித்தல், பாதகாமான தீர்மானங்கள் வருகின்றபோது அவற்றினைக் கண்டித்தல் என்கின்ற பொறுப்புடன் மைய அரசிடமிருந்து மாகாண அரசுக்கு வரவேண்டிய அதிகாரங்களை கேட்டு, அல்லது அரசியல் ரீதியாக போராடிப்பெறல் என்கின்ற அரசியல் பாத்திரத்தினை செய்தல், ஆகிய இந்த அரசியல் நிலைப்பாட்டினை கிழக்கு மாகாணசபையில் சுயாதினமாக நின்று செய்யமுடியுமாக இருந்தால், அது முஸ்லிம் மக்களின் உரிமைப் பாதுகாப்பிற்கும், எதிர்கால அரசியல் வழிமுறைக்கும் மிக அதிக நன்மைகளையும் நம்பிக்கையையும் அக, புறரீதியாக கொண்டு வரும்.

காலவோட்டத்தில் அரசியல் நிலைமைகளின் மாற்றங்களின் அடிப்படையில் எத்தரப்புடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதில் சமூக நன்மைகளும், முஸ்லிம்களின் உரிமைக்கான உத்தரவாங்களும் இருக்கிறதோ அவர்களுடன் சேர்ந்து கூட்டு அரசினை அந்தஸ்துடன் கௌரவமாக அமைத்துக் கொள்ளலாம். இறுதியாக பேராசிரியர் நுஹமான் நேர்காணல் ஒன்றில் கேள்வியொன்றிற்கு அளித்த பதிலை மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்:

கேட்கப்பட்ட கேள்வி: தமிழ் பேசும் மக்களுக்குரிய அரசியல் எதிர்காலம் என்ன?

பதில்: அது பெரிய கேள்விக்குறி தான். அவர்களின் அடிப்படை வாழ்வே கேள்விக்குள்ளாகி இருக்கின்றது. சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாது இருக்கிறது. இன்றைய நிலைமையில் சிங்கள தீவிரவாதம்தான் மேலோங்கி உள்ளது. அது சிறுபான்மையினரின் உரிமைக்கு சாதகமாக இல்லை. தோல்வியில் முடிந்த முப்பது ஆண்டு யுத்தம் சிறுபான்மையினரின் அரசியலை சிக்கலான இடத்தில் கொண்டுவந்து நிறுத்தி இருக்கின்றது. அது அண்டிப் பிழைப்போரின் அரசியலாகியிருக்கின்றது. மையநீரோட்டத்தில் மாற்றங்கள் ஏற்படாதவரை இது தொடரும் என்றுதான் தோன்றுகிறது.

மேற்படி பதிலே தமிழர்களின் இன்றைய நிலைமையை நன்கு விளக்கக் கூடியது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் வருகையை எதிர்த்து சேலத்தில் ஒருவர் தீக்குளிப்பு



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து சேலம் போஸ் மைதானத்தில் நேற்று காலை ஒருவர் தீக்குளித் துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுமக்களும் சேலம் பொலிஸாரும் தீக்குளித்தவரை மீட்டு சேலம் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

தீக்குளித்தவர் ஆட்டோ சாரதி எனவும் அவரது பெயர் விஜயராஜ் (வயது 26) எனவும் தெரியவந்துள்ளது. நேற்று அதிகாலை 4.30 மணியளவில் அவர் சேலம் பேருந்து நிலையத்தில் மண்ணெண்ணெயை உடலில் ஊற்றிக்கொண்டு மஹிந்தவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன் அவர் இந்தியாவிற்கு வரக்கூடாது என்றும் உரக்க கத்தியுள்ளார். அப்போது திடீர் என்று உடலில் தீ வைத்துக் கொண்டார்.

தீக்குளிப்புக்கு முன்பு அவர்தனது தினக்குறிப்பேட்டில் எழுதியவை வருமாறு,

இந்திய அரசு இலங்கைக்கு ஆயுதங்கள், டாங்கிகள், கனரக விமா னங்கள் கொடுத்து தமிழர்களுக்கு தொடர் துரோகம் இழைத்துள்ளது. இந்த மத்திய அரசும் சோனியா காந்தியும் இன்னும் திருந்தவில்லை. இனி யாவது இவர்கள் திருந்த வேண்டும். என்னுடைய உயிர் ஆயுதத்தை பார்த்து தமிழர்கள் மஹிந்தவை திருப்பி அனுப்ப வேண்டும். அதற்காகத்தான் இதை நான் செய் தேன்.

இலங்கை ஜனாதிபதியை இந்தியாவிற்குள் விடக்கூடாது. இத்தனை வீரமரணத்திற்குப் பின்னரும் மஹிந்தவுக்கு இந்திய அரசு வரவேற்பு கொடுக்கிறது. இதை பார்த்தாவது தமிழர்கள் ஒட்டுமொத்தமாக எழுச்சிப் பெற்று மஹிந்தவை எதிர்க்க வேண்டும் என்றார். பலத்த தீக் காயங்களுடன் அவதிப்பட்டுக் கொண்டே...

மருத்துவர்கள் அவரை பேசக்கூடாது என்று கூறியும் நான் எனது உணர்வுகளை மீடியாக்கள் மூலம் தமிழகத்துக்கு தெரிவிக்கிறேன். என்னை பேசவிடுங்கள் என்றார்.

விஜயராஜ் குறித்து மருத்துவர்கள் கூறுகையில், 80 சதவீதத்திற்கு மேலாக தீக்காயம் ஏற்பட்டுள்ளது. தீவிர சிகிச்சையில் இருக்கிறார் காப்பாற்ற முயற்சிக்கிறோம் என்றனர். (அ-2)

# மேர்வின் சில்வாவின் மகனுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இராணுவ மேஜரை தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இவருடன் ரேஹன் விஜயவர்த்தன மற்றும் ஏனைய சந்தேக நபர்களும் பொலிஸில் சரணடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவ மேஜர் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் மாலக்க விசேட வாக்கு மூலமொன்றை அளித்துள்ளார். இதன் போது அவர் கூறிய விடயங்கள் வருமாறு,

ஹோட்டலில் நைட் கிளப்பில் ஏற்பட்ட குழப்பத்தின் போது யாரோ சிலர் மேஜரை தாக்கினர்.

அன்றையதினம் கொழும்பிலுள்ள ஹில்டன் வீட்டுத்தொகுதியில் எனது நண்பர்களுடன் தேர்தல் முடிவுகளை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தேன்.

நான் தேர்தல் முடிவுகளை தொலைக்காட்சியில் பார்த்த பின்னர் வீட்டிற்கு போக தயாரான போது 2 பேரை அவதானித்தேன். இவர்களில் ஒருவரை வெளிநாட்டு பயணங்களின் போது பல தடவைகள் நான் சந்தித்துள்ளேன். நான் அவருக்கு ஹலோ சொன்னேன். பின் வந்த மற்றைய நண்பர் இவன் யாரென அவர்களிடம் கேட்டார். என்னை பற்றி அவன் இவனெனப் பேசுவதற்கு நீ யாரென நான் கேட்டேன் என்றார்.

கொழும்பு புறக்கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட மாலக்க சில்வா ரேஹன் விஜயரட்ன மற்றும் 5 பேரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# சமூகவிஞ்ஞான போட்டி

(மல்லாவி)

இவ் ஆண்டுக்கான தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி மூல மாணவர்கள் இத் தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் போட்டியில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றவுள்ளனர். (அ-3-15)

# பதுளையில் இருந்து வந்த பஸ் முறிகண்டியில் தடம் புரண்டது

(யாழ்ப்பாணம்)

பதுளையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் முறிகண்டியில் தடம் புரண்டதில் அதிலிருந்த அனைவரும் சிறு காயமடைந்தனர்.

சுமார் 40 பயணிகளுடன் கடந்த 15 ஆம் திகதி இரவு 9 மணியளவில் பதுளையில் இருந்து புறப்பட்ட பஸ்ஸே நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு தடம் புரண்டுள்ளது. இதில் காயமடைந்த அனைவரும் கிளி நொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (எ-36)

# தங்க பிஸ்கட்டுக்களை கடத்தியவர் கைது

தங்க பிஸ்கட்டுக்களை கடத்த முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மும்பைக்கு செல்லவிருந்த கொழும்பு பகுதியை சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 15 தங்க பிஸ்கட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு குறித்த நபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


இம்மாதத்தில் மாத்திரம் தங்கத்தை வெளிநாடுகளுக்கு கடத்த முற்பட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 6 கோடி பெறுமதியான ஆடைகள் மீட்பு

பலகோடி ரூபா பெறுமதியான ஆடைகளை திட்டமிட்ட வகையில் திருடிய கும்பல் தொடர்பான தகவல்களை பொலிஸார் திரட்டியதுடன் ஆடைகளையும் மீட்டுள்ளனர்.

கட்டுநாயக்கவிலுள்ள பிரபல ஆடை தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஆடைகளை திருடியதாக கூறப்படும் ஐவர் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்த குற்றச்செயல் தொடர்பான தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

குறித்த ஆடைத் தொழிற்சாலையிலிருந்து ஆடைகளை ஏற்றிச் செல்லும் கொள்கலன்களை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று அதிலிருக்கும் ஆடைகளை சந்தேக நபர்கள் சூட்சுமமான முறையில் திருடியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-9)





சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் நிறுவுநர் நினைவுநாளும் நினைவுப் பேருரையும் அண்மையில் நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நினைவுப் பேருரையாளர் டாக்டர் ந.சிவராஜா வாழ்வக ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் புனித சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்துவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# சிகரெட்களை கடத்தியவருக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளை லொறியொன்றில் ஏற்றிச் சென்ற இருவர் அம்பாறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கல்முனைக்குடி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த லொறியில் இருந்து 21 இலட்சத்து 84ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் அம்பாறை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டதை தொடர்ந்து இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

223

## ஈகையும் இறைவனும்!

வெகு காலத்திற்கு முன்னர் வஜ்ராவக என்ற முனிவர் ஒருவர் இருந்தார். அவர் சொர்க்கம் என்ற ஒரு இடமுண்டு, பூமியில் நல்லொழுக்கத்துடன் தர்மம் செய்து வாழ்ந்தால் இறந்த பின்பே அங்கே செல்லமுடியும் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தார்.

ஆனால் அவருடைய மைந்தன் நசிகேதனோ தந்தையின் குணத்திற்கு நேர் மாறாக இருந்தான். தனது தந்தை வந்தவர்களுக்கு வாரி வழங்குவது அவனுக்கு முற்றிலும் பிடிக்கவில்லை.

தங்கள் செல்வத்தைத் தாங்கள் மட்டுமே அனுபவிக்கவேண்டும் என்ற சுயநலத்துடன் இருந்தான். இப்படி அவர் தானம் செய்வதை எப்படித் தடுப்பது? இந்தச் செல்வமோ தந்தையார் சம்பாதித்தது. என்ன செய்வது? என்று மகன் மனதிற்குள் குமுறினான்.

மேலும் தந்தையாருக்கு சொர்க்கத்திற்குச் செல்வதைத் தவிர இவ்வுலக இன்பங்களில் ஈடுபாடு இல்லையே என வருந்தினான்.

ஒருநாள் தன்னிடம் தானம் பெற வந்த ஒரு வேதியருக்கு இந்திர பகவான் பெயரால் நூறு பசுக்களை வஜ்ராவக அளித்துவிட்டார்.

ஆனால் அவர் அளித்த அந்த பசுக்கள் இளைத்து பால் தர இயலாத நிலையில் இருந்தன.

அதனால் வஜ்ராவக நல்ல பால் தரக்கூடிய பசுக்களை தன்னால் வழங்க முடியவில்லையே என்று வருந்தினார்.

தந்தை மிகுந்த கவலையுடன் இருப்பதைக்கண்ட மகன் நசிகேதன், தந்தையே! தாங்கள் ஏன் சோகமாக இருக்கிறீர்கள்? தங்களிடம்



இந்தப் பசுக்களை விட மேலான ஒன்று உள்ளதே! அதை தானமாகக் கொடுத்துவிட வேண்டியது தானே? என்றான்.

அது என்ன? என்றார் தந்தை.

அது நான்தான் என்றான் மகன்.

இதைக் கேட்ட தந்தை மனம் வெறுத்துப்போனார்.

போ, உன்னையும் தானம் செய்துவிட்டேன் என்றார்.

மகன் யாருக்கு? என்றான்.

எரிச்சலுடன் எமனுக்கு என்று கூறிவிட்டார் தந்தை.

உடனே நசிகேதன் வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

இறப்புக்கு அதிபதியான எமதர்மனைத் தேடிக் கொண்டு சென்றான்.

மரணமென்றால் அவனுக்கு மிகுந்த பயம். ஆனால் எல்லோருக்கும் மரணம் உண்டு.

அதனால் அதைக்கண்டு பயந்து என்ன பயன்? என்றும் எண்ணிக் கொண்டான்.

நீண்ட தூரப்பயணத்திற்குப் பின் ஒரு வழியாக எமலோகத்தை அடைந்தான். அதன் வாயிலுக்கு வெளியே நின்றான்.

அப்போது எமன் அங்கே இல்லை என்று கேள்விப்பட்டான். எமன் வரும் வரை எமலோக வாயிலிலேயே காத்துக்கிடந்தான்.

திரும்பிவந்த எமதர்மன் நசிகேதனைப் பார்த்து யாரப்பா நீ? எதற்காக இங்கே வந்தாய்? என்று கேட்டான். உடனே நசிகேதன் எமதர்ம



ராசாவே! என் தந்தை என்னைத் தங்களுக்குத் தானமாகத் தந்துவிட்டார்.

ஆகவே, என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தான். இதனைக் கேட்ட எமனுக்கு மிகுந்த ஆச்சரியம்!

என்ன! தானமா எப்படி? என்று வினவினான்...

மேலும் தானம் என்றால் அதற்கு இரண்டு பேர் இருக்கவேண்டும். ஒருவர் தானத்தை அளிப்பவர். மற்றவர் பெறுபவர். வாங்குகிறவரே இல்லாதபோது அது எப்படித் தானமாகும்? என்று கேட்டான்.

அதற்கு நசிகேதன் பூமியில் மனிதர்கள் கடவுளின் பெயரால் பற்பல தானங்களைச் செய்து வருகிறார்களே! என்று சொன்னான்.

அதற்கு எமன் அவர்கள் அனைவரும் ஏமாளிகள். தெய்வங்கள் எவரிடமிருந்தும் தானங்கள் பெறுவதில்லை என்று பதிலளித்தான்.

நசிகேதன் தன்னை தானமாக ஏற்றுக் கொள்ளும்படி எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும் ஏற்றுக்கொள்ள எமன் மறுத்துவிட்டான்.

வேறு வழி ஏதும் இல்லாததால் அவன் தனது வீட்டிற்கே திரும்பும் படியாகி விட்டது.

அவனைக்கண்ட தந்தைக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. மகன் திரும்பி வந்ததில் அவருக்கு மகிழ்ச்சிதான் என்றாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாமல் நான்தான் உன்னை தானம் செய்துவிட்டேனே! பின்னர் எப்படி நீ திரும்பி வந்தாய் என்று கேட்டார்.

தந்தையே தெய்வங்கள் எவரிடமும் தானம் பெறுவதில்லை என்றான் நசிகேதன். எமனுடன் நடந்த விவாதங்கள் அனைத்தையும் அவரிடம் தெரிவித்தான்.

ஆனாலும் அவனது தந்தை நம்பிக்கையிலிருந்து சிறிதும் விலகாமல் முன் போலவே தொடர்ந்து தான தர்மங்களைச் செய்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறோம்; பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## அநுராதபுரம் சிறைக்கைதிகள் உருக்கமான கடிதம்

(அநுராதபுரம்)

**அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தி தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

**இந்நிலையில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர், மனித உரிமை அமைப்புகள், மக்கள் கண்காணிப்பு அமைப்பு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பின்மை தொடர்பானது அநுராதபுரம் சிறைச்சாலையில் சுமார் 65 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் பாதுகாப்பு மற்றும் இதர பிரச்சினைகள் காரணமாக அரசியல் கைதிகளுக்கென உயர் பாதுகாப்பு பகுதி என்ற விசேடமான விடுதி வழங்கப்பட்டு அதிலேயே அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், தற்போது அந்நிலை முற்றிலும் மாறியுள்ளது. அதாவது வழக்கு முடிவடைந்து நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகளும் அத்துடன் வேறு சிறைச்சாலைகளில் இருந்து வழக்கு மற்றும் ஏனைய விடயங்களுக்காக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்படுகின்ற தமிழ் அரசியல் கைதிகளும் எந்தவிதமான அடிப்படை காரணங்களுமின்றி முற்றிலும் பாதுகாப்பற்ற விடுதிகளில் பலவந்தமாக அடைக்கப்படுகின்றனர்.

அதாவது பல்வேறுபட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட சிங்கள கைதிகள் இருக்கும் விடுதிகளில் நடைமுறைக்கு மாறாக அடைக்கப்படுவதுடன் சிறைக்காவலர்களும் ஏனைய கைதிகளும் அடிப்படை விடயங்களில் கூட பாரபட்சமாக நோக்கப்பட்டு மிக மோசமான ரீதியில் சொல் மற்றும் செயற்பாடுகளால் துன்புறுத்தப்படுகின்றனர்.

அத்துடன் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சில சிறை அதிகாரிகள், சிறைக்காவலர்கள், சிங்களக் கைதிகள் தமது பழி தீர்க்கும் படலத்தை அரங்கேற்றி வருகின்றனர்.

அதனால் எந்த வேளையும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடனேயே கம்பிக் கூண்டுக்குள் தமிழ் அரசியல் கைதிகள் ஒவ்வொரு நிமிடத்தையும் கழித்து வருகின்றோம்.

இதே போன்றதொரு செயற்பாட்டின் விளைவாகவே கடந்த ஜூலை மாதம் வவுனியா சிறைச்சாலையில் இருந்து வழக்கொன்றிற்காக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு அரசியல் கைதி, சிங்கள கைதிகள் விடுதிக்குள் தனியாக அடைக்கப்பட்ட நிலையில் ஏனைய கைதிகளால் மலசலத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் சிறையதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருந்து அதனை ஆமோதிப்பதாக நடந்து கொண்டனர்.

வவுனியா அசம்பாவிதத்தை அடுத்து ஏனைய அரசியல் கைதிகளையும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றியதன் பின் அநுராதபுர சிறை அதிகாரிகளால் மிக மோசமாகவும் கண்மூடித்தனமாகவும் கம்பிகள், பொல்லுகளால் தாக்கப்பட்டதை மறைந்திருந்து நாம் கவனித்தோம்.

இதுபோன்ற தவறுகளாலேயே தமிழ் அரசியல் கைதிகளான நிமலரூபன், டெல்றொக்சன் ஆகியோரின் உயிர்களும் பறிக்கப்பட்டது என்ற கொடுமையான குறிப்பினை இவ்விடத்தில் நினைவுபடுத்துகிறோம்.

இவ்வாறான விடயங்கள் அநுராதபுரம் சிறைச்சாலை மட்டுமின்றி இலங்கையின் பல சிறைச்சாலைகளிலும் அண்மைக்காலமாக நடந்து வருகின்றமையும் இது தொடர்பில் அந்தந்த சிறைச்சாலை அத்தியட்சகர்களிடம் பலமுறை எடுத்துக்கூறியும் அதனை பொருட்படுத்தமாலிருப்பது கவலையளிக்கிறது.

இச்செயற்பாடுகளை ஆழமாக நோக்குமிடத்து இதன் பின்னணியில் மீண்டுமொரு தமிழ்-சிங்கள இன மோதல்களை சிறைச்சாலைகளில் ஏற்படுத்தும் எண்ணம் ஏதும் உள்ளதா? என்ற கேள்வி எழுகின்றது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் துறைசார் அதிகாரிகள் அக்கறையுடன் செயற்பட்டு தகுந்த தீர்வொன்றினை பெற்றுத் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## புகையிரத நிலையங்களை நவீன மயப்படுத்த திட்டம்

### புகையிரத திட்டமிடல் பணிப்பாளர்

10 புகையிரத நிலையங்கள் சர்வதேச தரத்திற்கு முன்னேற்றப்படவுள்ளதாக புகையிரத திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதிக வருமானம் ஈட்டும் பத்து புகையிரத நிலையங்களை நவீன மயப்படுத்தி பிரயாணிகளுக்கு சகல வசதிகளையும் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, கோட்டை, மருதானை, ராகமை, கம்பஹா, வெயாங்கொடை, அநுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, கண்டி, காலி ஆகிய புகையிரதநிலையங்களே நவீன மயப்படுத்தப்படும். இதன்மூலம் சர்வதேச தரத்திற்கு புகையிரத சேவைகளை வழங்கவும் புகையிரத திணைக்களம் தீர்மானித்துள்ளது. (அ-2)

## வடமராட்சி மக்களுக்கு சீரான மின்சாரம் இல்லை

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)


வடமராட்சி பிரதேச மக்களுக்கு சீரான மின்சாரம் கிடைப்பதில்லை என மக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயற்குழுக்கூட்டத்தில் வைத்தே இவ்வாறு சுட்டிக் காட்டினர்.

மேற்படி பிரதேசத்தில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாகவும் மின்இணைப்பு துண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மின்சாரசபை ஊழியர்கள் உரிய நேரத்திற்கு வந்து மின்சாரத்தை சீர்செய்வதில்லை. நீண்ட காலமாக மின்சாரத்திற்காக பதிவு செய்யப்பட்டு கட்டணங்கள் செலுத்திய போதும் மின்சாரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என மக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு பதிலளித்த நெல்லியடி உப மின்சார சபையின் பிரதிநிதி வடமராட்சி பரந்த பிரதேசத்திற்கு மின்சாரசபையில் இருந்து 15 ஊழியர்கள் மட்டுமே கடமையில் ஈடுபடுகின்றனர். இருந்த போதிலும் மக்களின் குறைபாடுகளை எம்மாலான அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறோம். 15 பணியாளர்களை வைத்துக்கொண்டு இவ்வாறான பரந்த பிரதேசத்திற்கு மின்சார சேவை ஆற்றுவது மிகவும் கடினமான விடயம்.

அத்துடன் மக்களின் தேவைகருதி வருங்காலங்களில் உபகரணங்கள், ஆளணிப்பற்றாக்குறை என்பவற்றை நிவர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில் எமது பணியாளர்கள் மக்களுக்கு நிறைவான மின்சார சேவையை வழங்கவும் தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-24)

## புடைவைக்கடை எரிந்து நாசம்



கிளிநொச்சி டிப்போ வீதி கனகபுரத்தில் உள்ள புடைவைக்கடை ஒன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்குறித்த இடத்தில் தொடர் கட்டடங்களில் காணப்பட்ட கடைகளின் நடுவில் உள்ள புடைவைக்கடையே தீப்பற்றி எரிந்தபோது இதை அவதானித்த அப்பகுதி இராணுவத்தினர் அவ்விடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

இப்புடைவைக் கடை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் அருகில் இருந்த வாகன உதிரிப்பாக கடையும் சேதமடைந்துள்ளது. இக்கடை எரிந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3)

## சாயி நிலையத்தில் விநாயகர் சதுர்த்தி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை புதன்கிழமை மாலை 4.15 மணிக்கு விநாயகர் சதுர்த்தி நடைபெறவுள்ளது. பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மேற்படி நிகழ்வில் காயத்திரி மந்திரம், சாயி காயத்திரி மந்திரம், கணபதி சுலோகங்கள், அபிஷேகம், அறுகம்புல் அர்ச்சனை மற்றும் பஜனை என்பன இடம்பெறவுள்ளன.

நிகழ்வின் நிறைவில் விநாயகரின் மகிமை என்றும் பொருளில் ஆர்.சரவணபவன் விசேட சொற்பொழிவினை ஆற்றவுள்ளார். (அ-9)

## சர்வதேச ஓசோன் தினம்

சர்வதேச ஓசோன் தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் விரிவுரையாளர்களினால் நடத்தப்படவுள்ள கருத்தரங்கிற்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 2 ஆசிரியர்களையும் 10 மாணவர்களையும் (தரம் 9 இற்கு மேல்) மற்றும் ஆர்வலர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினர் கேட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளையே பல்கலைக்கழகங்கள் கோருகின்றன

## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க புலம்புகிறார்



(கொழும்பு)

**வெளிநாடுகளில் கல்விக்காக கூடுதலான தொகை ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என கூறுகின்ற போதிலும் அந்நாடுகளைவிட இலங்கை கூடுதலான தொகையை கல்விக்காக செல்விடுகிறது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இந்த பேராசிரியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் நிதி தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ளது.

பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் முக்கியஸ்தர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக இவ்விதம் நியாயமற்ற கோரிக்கைகளை விடுத்திருப்பது பற்றி பெரும்பாலான பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் வெட்கப்பட்டு தலைகுனிந்திருக்கின்றனர்.

தற்போது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் விடுத்துள்ள கோரிக்கைகள் உலகின் எந்த ஒரு நாட்டின் பல்கலைக்கழகத்திலும் நடைமுறையில் இல்லாத கோரிக்கைகளாக இருக்கின்றன.

நாட்டின் தற்போதைய தேசிய உற்பத்தியில் இருந்து 14.02 சதவீதம் வருமானமாக அரசுக்குக் கிடைக்கின்றது. அரசாங்கம் கல்வித் துறைக்கு மாத்திரம் வருடாந்தம் 1.87 சதவீத நிதியை ஒதுக்குகின்றது.

இந்த தொகையை 6 சதவீதமாக அதிகரிக்குமாறு பல்கலைக்கழக பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் கேட்கிறார்கள். அரசாங்கம் தனது வருமானத்தின் ஒரு பகுதியை அரசாங்க ஊழியர்களின் சம்பளத்துக்காகவும் ஓய்வூதியக் கொடுப்பனவுக்காகவும் பொது மக்களுக்கான தர்மப்பணம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவும், சலுகை விலையில் உரப்பசளையும் கொடுப்பதற்காகவும் செலவிடுகின்றது.

இவற்றுடன் மக்களுக்கான வாழ்வாதார செயற்படுகளுக்காக 6.7 சதவீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர்களின் கோரிக்கைக்கு அமைய கல்விக்கு 6 சதவீதத்தை ஒதுக்கினால் அமைச்சுக்கள் மற்றும் ஜனாதிபதி, பிரதம மந்திரி ஆகியோரின் காரியாலயங்களுக்கும் ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் மிஞ்சுவது 1.5 சதவீத வருமானமே ஆகும். இந்தத் தொகை அரசாங்கத்தின் ஏனைய செயற்பாடுகளுக்கு எந்த விதத்திலும் ஏற்புடையதாக இருக்காது.

வெளிநாடுகள் கல்விக்கு கூடுதலான தொகையை ஒதுக்கீடு செய்கின்றன என்று பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் கூறுகின்ற போதிலும் அந்நாடுகளை விட இலங்கை கூடுதலான தொகையை கல்விக்காக செலவிட்டு வருகின்றது.

பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் தொழிற்சங்கத்தின்முக்கிய தலைவர்கள் 6 சதவீதத்தை கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்று விடுக்கும் கோரிக்கைகள் நியாயமற்றதாக இருக்கின்ற அதேவேளையில் அது எக்காரணம் கொண்டும் நிறைவேற்ற முடியாத ஒரு கோரிக்கை என்பதை ஏனைய பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் புரிந்து கொண்டுள்ளார்கள்.

பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பீடத்தினரையும் பல்கலைக்கழக மாணவர்களையும் இந்த வேலைநிறுத்தத்தில் சேர்த்துக் கொண்டு பல்கலைக்கழக கல்வியை சீர்குலைப்பதற்கு இந்த அரசியல் கட்சிகளும் அரசசார்பற்ற அமைப்புகளும் சதி செய்து வருகின்றன என்றார். (அ-2)


# ரஷ்ய ம. உ. ஆணையாளர் இலங்கை வருவார்

(கொழும்பு)

ரஷ்ய மனித உரிமை ஆணையாளர் கொன்ஸ்தாந்தின் தொல்கோவ், இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் இன்று அல்லது நாளைய தினம் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் விசேட அழைப்பை ஏற்றுக் கொண்டு, தொல்கோவ் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் அண்மையில் பாரதியார் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் குருமன்காட்டு சந்தியிலுள்ள பாரதியாரின் சிலைக்கு வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:பூந்தோட்டச் செய்தியாளர்)

# சர்வகட்சி ஆட்சி அமைப்பதற்காக கேட்டதை எல்லாம் கொடுக்க முடியாது

## இப்படிக் கூறுகிறார் கெஹலிய

(கொழும்பு)

அரசாங்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. இங்கு யார் வேண்டுமானாலும் வரலாம். போகலாம். ஆனால், கேட்பதையெல்லாம் கொடுப்போம் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது என அமைச்சரவை பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் சர்வகட்சி ஆட்சி அமைப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு மாத்திரமல்ல ஏனைய கட்சிகளுக்குமான பொதுவான அழைப்பையே அரசு விடுத்துள்ளது. எனவே, அரசின் கொள்கைகள் மற்றும் தேசிய நல்லிணக்கம் போன்றவை தொடர்பில் இணக்கப்பாடுடனான ஒன்றிணைந்த சர்வ கட்சி ஆட்சியினையே கிழக்கில் அரசு விரும்புகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மிகவும் வெளிப்படையாக அரசின் கொள்கைகள் தொடர்பில் கூறியுள்ளார். அதாவது, அனைவருக்கும் எப்பொழுதும் அரசாங்கம் கதவைத் திறந்தே வைத்துள்ளது. இங்கு யார் வேண்டுமானாலும் வந்துபோகலாம். கட்டாயம் என்றில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையினையும் திறந்த கொள்கையினையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசிய நல்லிணக்கம், ஐக்கியம் மற்றும் பாதுகாப்பு போன்றவை உறுதிப்படுத்தும் வகையிலேயே தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியும். கிழக்கு மாகாணத்தில் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்த ஆட்சியொன்றுக்கான அழைப்பை அரசு திறந்தளவில் அறிவித்துள்ளது.

எனவே,கூட்டமைப்போ ஏனைய கட்சிகளோ ஒன்றிணைந்து செயற்படலாம். ஆனால், நிபந்தனைகள் மற்றும் அழுத்தங்களுக்கு அடி பணிந்து கேட்பதையெல்லாம் அரசு கொடுத்து விடும் என்று யாரும் நினைத்து விடக்கூடாது.

இது சாத்தியப்படவும் போவதில்லை. அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படவே விரும்புகின்றது என்றார். (அ-2)

# ஜனாதிபதி மகிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல்

## சஜின்வாஸ் முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன முறைப்பாடு செய்துள்ளார். புலனாய்வுப் பிரிவினரிடமே சஜின்வாஸ் குணவர்தன இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

கடந்த வார இறுதியில் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் ஜனாதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வகையில் தேவையற்ற கேலிச்சித்திரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதிக்கு எதிராக மக்களை தூண்டும் வகையில் சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு நட்டம் ஏற்படுத்துவதும் நட்டம் ஏற்படுத்தப் படுதலும் அனுமதிக்கப்பட்டது அல்ல.

~ நபிகள் நாயகம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மாறுபட்ட விற்பனை விலைகள் வணிகர் கழகம் கவனிக்க வேண்டும்

யாழ்ப்பாண சமூகத்தின் தொழிற்றுறை, வர்த்தகம் மட்டும் என்றாகிவிட்ட நிலையில் இப்போது பலர் கடைகளை மூடிவிடுவதற்கு முடிவு செய்துள்ளனர்.

அதிகரித்த வாடகை, இலட்சக்கணக்கான முற்பணம், இவற்றின் மத்தியில் விற்பனையில்லாத வெறுமை, இந்நிலையில் கடையைப் பூட்டுவதுதான் பெருநட்டத்தில் இருந்து தப்புவதற்கு ஒரேவழி என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

வீதி எங்கும் கடைகளைக் கட்டி வர்த்தகம் ஒன்றுதான் தொழில் என்று செயற்பட்டதன் வினையை எங்கள் சமூகம் அனுபவிக்கத் தொடங்கி விட்டது.

கட்டப்பட்ட கடைகள் திறக்கப்பட்ட வேகத்தில் பூட்டப்படும் பரிதாபத்தில்,

யாழ்ப்பாண வர்த்தகம் யாழ்ப்பாண மக்களிடம் இருந்து விடைபெறுவதற்கு தயாராக இருக்கின்ற யதார்த்தத்தை உணர்ந்துகொள்ள நாம் இன்னமும் தயாராகவில்லை.

சிறப்பு அங்காடிகள், கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட நிறுவனங்கள், வீடு வீடாகச் சென்று விற்பனை செய்யும் தென்பகுதி வர்த்தக நுட்பங்கள் என்பன யாழ்ப்பாண மண்ணைச் சூழ்ந்துகொண்டுள்ள இவ்வேளையில்,

உச்ச இலாபம் ஒன்றை மட்டும் மையமாகக் கொண்ட யாழ்ப்பாண வர்த்தக நிறுவனங்கள் இவற்றுக்கு ஈடுகொடுத்து இயங்குவது என்பது கடினமான காரியம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இதற்கு மேலாக யாழ்ப்பாண வர்த்தக நிறுவனங்க்ளில் ஒருபொருளுக்குப் பல விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாணக் கடைகள் மீது நம்பகத்தன்மையைக் குறைக்கும்.

உதாரணமாக, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள மின்சாதனப் பொருட்களை விற்பனை செய்யும் இரண்டு கடைகளில் ஒத்த தரமுடைய ஸ்சார்சர் லைற்றின் விலைகளை விசாரித்தபோது, இரண்டு கடைகளுக்குமான விலையில் 300 ரூபாய் வித்தியாசம் காணப்பட் டது.

ஒருபொருள்; ஒரே தயாரிப்பு; ஒரே கால உத்தரவாதம் என்பதாக இருக்கிறபோது ஏன்இப்படியான விலை மாற்றங்கள் என்பது தெரியவில்லை.

இதுபோல வேறுபொருட்களுக்கு இடையிலான விலைஏற்ற இறக்கங்களையும் சுட்டிக்காட்டமுடியும்.

இதுவிடயத்தில் யாழ்ப்பாண வணிகர் கழகம் கவனம் செலுத்த வேண்டும்.

கண்டபாட்டில் நுகர்வோர் ஏமாற்றப்பட்டால் அது தென்பகுதி வர்த்தக நிறுவனங்களின் இருப்பை யாழ்ப்பாணத்தில் மேலும் வலுப்படுத்தும். கவனம்!

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55ஆவது பேராளர் மாநாடு 21-ம் திகதி வவுனியாவில்

(வவுனியா)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55 ஆவது பேராளர் மாநாடு எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளில் நடைபெறுகின்ற பிரச்சினைகளையும் நாட்டின் சமகாலப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தீர்மானிக்கும் இந்த மாநாட்டில் அனைவரையும் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைக்கும்படி இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்ராலின் கேட்டுள்ளார்.

அத்துடன் 2012-2013ஆம் ஆண்டுக்கான சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு தாபனக் கோவை XXV -2-1 பிரிவின் படி ஒருநாள் கடமை விடுமுறையும் ஒருசோடி புகையிரதப் பயணப் பத்திரமும் தங்களுக்கும் உரித்தாகும்.

தங்களது இந்த உரிமைகளை மறுப்பதற்கு அதிபர்களுக்கோ வேறு அதிகாரிகளுக்கோ உரிமை இல்லை.

கடமை விடுமுறையையும் புகையிரதப் பயணச் சீட்டையும் பெறுவதற்கு அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் அழைப்பிதழ் இன்றி மாநாட்டு மண்டபத்திற்குள் அனுமதிக்கப் படமாட்டார்கள் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ந-9)

## 6 கிலோ கஞ்சாவுடன் நேற்று ஒருவர் கைது

(கொழும்பு)

4 இலட்சம் ரூபாய் பெறுமதியான 6 கிலோ கிறாம் கஞ்சாவுடன் நபர் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்ததாக நீர்கொழும்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மடம்பெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நிலத்தின் கீழ் பங்கர் ஒன்றிற்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்தக் கஞ்சாப் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் இராணுவத்தில் இருந்து விலகிய முன்னாள் வீரராவார்.

இவர் நீண்டகாலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-11)

## நீதிமன்ற உத்தரவை மதிக்கிறேன் -மேர்வின் சில்வா

தனது மகனுக்காக தான் வருந்துகின்ற போதிலும் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவை தான் மதிப்பதாக ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

ஒரு பௌத்தர் என்ற வகையில் இதைத் தன்னால் சகித்துக் கொள்ள முடியும் எனக் கூறிய அமைச்சர் மேர்வின் சில்வா, ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் சட்டத்தின் ஆட்சி அமுலில் உள்ளது என்பதை இந்நீதிமன்ற உத்தரவு வெளிப்படுத்துவதாகவும் கூறினார். (ந-11)

## 1 1/2 கிலோ தங்கத்துடன் கைது

10 மில்லியன் ரூபாய் பெறுமதியான 1.5 கிலோ தங்க பிஸ்கட்டுகளை இந்தியாவின் மும்பைக்கு கடத்த முற்பட்ட குற்றச்சாட்டின்பேரில் 43 வயதான வர்த்தகரொருவர் பண்டாரநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-11)

## இந்த அரசு கவிழும்போதுதான் ஹிருணிகாவிற்கு நீதி கிடைக்கும் பொன்சேகா பேச்சு



ஹிருணிகா பிரேமச்சந்திர எமது தரப்பில் இல்லாவிட்டாலும் இந்த அரசாங்கம் கவிழ்க்கப்படும்போது அவர் உட்பட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்படும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

பண்டாரகமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த அரசாங்கம் கவிழ்க்கப்படும்வரை ஹிருணிகாவின் தந்தையை கொன்றவர்கள் தண்டிக்கப்பட்டு ஹிருணிகாவிற்கு நீதி வழங்கப்படுவதோ தங்காலை மற்றும் அக்குரஸ்சவில் பிரதேச அரசியல்வாதிகளால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர்களுக்கு நீதிவழங்கப்படுவதோ நடைபெறமாட்டாது என பொன்சேகா கூறினார். (ந-11)

## சிறுமியை துஷ்பிரயோகம் செய்த தந்தையும் மகனும் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

13 வயதுச் சிறுமியை பாலியல் ரீதியில் துன்புறுத்திய தந்தையும் மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசித்துவரும் குறித்த சிறுமி கடந்த 13ஆம் திகதி தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். அங்கு தனக்கு ஏற்பட்ட நோய்க்கான மருந்தினை எடுத்துக்கொண்டு பேருந்தில் ஏறியுள்ளார்.

இந்நிலையில் தான் வசிக்கும் இடத்தில் இறங்குவதற்குப் பதிலாக யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலுள்ள பஸ் நிலையத்தில் இறங்கியுள்ளார்.

இதற்கு காரணம் தனக்கு ஏற்பட்ட நோய்க்கு மருந்தினை எடுத்துக்கொண்டு வரும்போது குறித்த சிறுமி பேருந்தில் உறங்கிவிட்டார்.

இந்நிலையில் யாழ். பேருந்து நிலையத்தில் தனித்து நின்ற சிறுமியை 19 வயது இளைஞன் ஒருவன் ஏதோ ஒரு காரணத்தைக்கூறி தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளான்.

பின்பு குறித்த சிறுமியை பாலியல் வல்லுறவிற்கும் உட்படுத்தியுள்ளான்.

இது தவிர தனது வீட்டிற்கும் குறித்த சிறுமியை அழைத்துச் சென்றதோடு இரவு தன்னுடைய வீட்டில் தங்க வைத்துள்ளான்.

இதேவேளை வைத்தியசாலைக்கு சென்ற சிறுமி வீடு வந்து சேராததையடுத்து மறுநாள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சிறுமி தன்னை அழைத்துச் சென்ற இளைஞனிடமிருந்து மீண்டு ஒருவழியாக தனது வீட்டைச் சென்றடைந்தாள்.

தனக்கு ஏற்பட்ட அவலத்தைப் பெற்றோரிடம் குறித்த சிறுமி எடுத்துக் கூறியுள்ளார். இதனையடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு சிறுமியுடன் சென்று பெற்றோர் முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.

இதன்போது திருநெல்வேலிப் பகுதியைச்சேர்ந்த இளைஞன் ஒருவன் தன்னை அழைத்துச் சென்று வன்புணர்வுக்குட்படுத்தியதாகவும் குறித்த இளைஞனின் தந்தையும் தன்னை பாலியல் ரீதியில் துன்பப்படுத்தியதாகவும் கூறியுள்ளார்.

இதனையடுத்து தந்தையையும் மகனையும் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமியை 17 வயதுடைய ஆண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முற்பட்டார் எனக்குற்றம் சாட்டப்பட்டு கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். (அ-6)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஒழுக்கத்தின் இலக்கணம்



கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத்தவிர வேறு ஒரு கடவுள் உலகில் இல்லை.

இரசாயனத்தைக் கற்பவன் இயற்கை என்னும் புத்தகத்தைப் படித்தறிவது போல ஆன்மீகத்தைக் கற்பதற்கு படிக்க வேண்டிய நூல் மனிதமனம்.

எல்லையில்லாத சக்தி சுருள் சுருளாக இந்தச் சிறிய மனித உடலுக்குள் சுருட்டிவைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தியை உணரமுயல்வது தான் ஆன்மீகம்.

சமயம் சார்ந்த தத்துவ உண்மைகளை மூளையில் ஏற்றிக்கொண்டு குழப்பிக்கொள்ளவேண்டும். உறுதி பிறழாத ஒழுக்கமே ஆன்மீகத்தின் அடிப்படை.

சுயநலம் ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம்.


மனதிற்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டாக்கும் எதையும் கைவிரலாலும் தீண்டக்கூடாது. பலமே வாழ்வு. பலவீனமே மரணம்.

கடவுளுக்குச்சமமான ஆற்றல் சாத்தானுக்கும் உண்டு. ஆனால் கடவுளுக்குச் சுயநலம் கிடையாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தேசிய மட்ட கபடிப் போட்டியில் நெல்லியடி ம.ம.வித்தி. சம்பியன்



(கரவெட்டி)

தேசிய மட்ட கபடிப் போட்டியில் 15 வயது பெண்கள் பிரிவில் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சம்பியனாகியுள்ளது. குழுக்களிடையேயான போட்டிகளில் ஊவாமாகாணம் பதுளை றூபகெல தமிழ் மகா வித்தியாலய அணியினை 8/40 என்ற புள்ளி அடிப்படையிலும் தென்மாகாணம் மீபாவெல அமரசூரிய தேசிய பாடசாலை அணியினை 22/37 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் வென்று அரையிறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகியது.

அரையிறுதிப் போட்டியில் மேல்மாகாணம் களனி ஜட்டிஜென கனிஷ்ட வித்தியாலயத்தை 18/36 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றதோடு நேற்று திங்கட்கிழமை கண்டி பெரதெனியா பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் திருகோணமலை கந்தளாய் அக்ரபோதி தேசிய பாடசாலை அணியினை 27/30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று தேசியமட்டச் சம்பியனானது. (24)

## தெல்லிப்பழை பிரதேசத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்

(வேலணை)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

21 வயதிற்குட்பட்டவர்களுக்கான உதைப்பந்தாட்ட போட்டியை நடத்துவது தொடர்பாக நடைபெறும் இக்கலந்துரையாடலில் போட்டிக்கான அட்டவணை தயாரிப்பும் இடம்பெறும் என்பதனையும் தெல்லிப்பழை பிரதேச செயலக உத்தியோகத்தர் வல்லவக்குமரன் தெரிவித்துள்ளார்.

# அளவெட்டி மத்திய வி.க.கிரிக்கெட் போட்டி; ஞானம்ஸ் B அணி அரையிறுதிக்கு தகுதி

(வேலணை)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடத்தும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் மூன்றாம் ஆட்டத்தில் C பிரிவிற்கான போட்டி 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது.

C பிரிவிற்கான முதல் போட்டியில் காமாட்சி அணியும் கண்ணகி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கண்ணகி அணி 8 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. 40 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 5 ஓவர்களில் 2 விக்கெட்டை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டால் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் பொற்பதி இந்து அணியும் ஞானம்ஸ் B அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் B 8 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 107 ஓட்டத்தை பெற்றது. 108 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து 8 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

மூன்றாவது போட்டியில் காமாட்சி அணியும் அளவெட்டி ஞான வைரவர் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் அணி 8 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 55 ஓட்டத்தை பெற்றது. 56 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நான்காவது போட்டியில் ப்ளு ஸ்ரார் அணியும் ஒக்ஸ்பேர்ட் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ப்ளு ஸ்ரார் அணி 8 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது.

37 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஒக்ஸ்பேர்ட் அணி 7 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டால் வெற்றி பெற்றது. ஐந்தாவது போட்டியில் அளவெட்டி ஞானவைரவர் அணியும் ஞானம்ஸ் B அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் B 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 65 ஓட்டத்தை பெற்றது. 66 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் அணி 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆறாவது போட்டியில் பிரம்படி அணியும் கலைவாணி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பிரம்படி அணி 4 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டை இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றது. 27 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி 6 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

ஏழாவது போட்டியில் கலைவாணி அணியும் ஒக்ஸ்பேர்ட் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஒக்ஸ்பேர்ட் அணி 8 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. 71 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி 7.2 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டால் வெற்றி பெற்றது.

காலிறுதிப்போட்டியில் ஞானம்ஸ் B அணியும் கலைவாணி அணியும் பலப்பரீட்சை நடத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் B அணி 8 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 76 ஓட்டத்தைப் பெற்றது.

77 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி 6.2 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றதனால் ஞானம்ஸ் B அணி 45 ஓட்டங்களால் வெற்றியடைந்து இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. ஏற்கனவே A குழுவிலிருந்து றோயல் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# என்.சி.சியை வீழ்த்தியது யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி



(வேலணை)

யாழ்ப்பாணத்திற்கு நட்புறவுப் பயணம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் என்.சி.சி விளையாட்டுக்கழகத்தின் 15 வயதுக்குட்பட்ட அணிக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 15வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிக்குமிடையிலான போட்டியொன்று இன்று ஸ்ரான்லிக் கல்லூரியில் இடம்பெற்றது. 25 பந்துபரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. யாழ். இந்துக் கல்லூரி சார்பில் துடுப்பாட்டத்தில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய உதயன் 2 ஆறுகள், 13 நான்குகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களையும் கஜானந் ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களையும் நிசோதன் 16 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் என்.சி.சி சார்பில் செனால் மற்றும் யாசின் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர். 169 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய என்.சி.சி 21.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 61 ஓட்டங்களால் போட்டியை இந்துக்கல்லூரியிடம் இழந்தது. துடுப்பாட்டத்தில் என்.சி.சி சார்பில் பிம்சர 34 ஓட்டங்களையும் ஹீமைட் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். யாழ். இந்துக்கல்லூரி சார்பில் பந்து வீச்சில் ராகுலன் 4 இலக்குகளையும் பானுகோபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண இருபது-20 இன்று கோலாகல ஆரம்பம்


ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

உலகக் கிண்ண இருபது-20 கிரிக்கெட் போட்டி இன்று கோலாகலமாக அம்பாந்தோட்டை சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதலாவது போட்டியாக இலங்கை அணியும் சிம்பாவே அணியும் இன்று இரவு 7.30 மணிக்கு மோதுகின்றன.

நான்காவது முறையாக நடைபெறும் உலகக் கிண்ண இருபது-20 போட்டி இம்முறை இலங்கையில் நடைபெறுகின்றது.

ஆர்.பிரேமதாஸ சர்வதேச விளையாட்டு அரங்கு, அம்பாந்தோட்டை சூரியவெவ சர்வதேச விளையாட்டரங்கு, பல்லேகல சர்வதேச விளையாட்டரங்கு ஆகிய 3 விளையாட்டரங்குகளிலேயே அனைத்துப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.



12 அணிகள் பங்குபற்றும் இப்போட்டி யில் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை:

குழு ஏ

இங்கிலாந்து, இந்தியா, ஆப்கானிஸ்தான்.

குழு பி

அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், அயர்லாந்து.

குழு சி

இலங்கை, தென்னாபிரிக்கா, சிம்பாவே.

குழு டி

பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்களாதேஷ் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உலகக் கிண்ண இருபது-20 போட்டியில் பாகிஸ்தான்-இந்தியா மோதிய பரபரப்பான ஆட்டத்தில் இந்தியா சம்பியனாகியது.

2009ஆம் ஆண்டு இலங்கை-பாகிஸ்தான் மோதிய இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் சம்பியனாகியது.


2010ஆம் ஆண்டு இங்கிலாந்து-அவுஸ்திரேலியா மோதிய இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து சம்பியன் பட்டத்தை வென்றது.

2012ஆம் ஆண்டு உலகக் கிண்ண இருபது-20 யாருக்கு என்ற கேள்வியுடன் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

கிண்ணம் வெல்லும் வாய்ப்பானது அனைத்து அணிக்கும் சமபலத்தில் காணப்பட்டாலும் மேற்கிந்தியத் தீவுகள் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு அதிகமாகக்காணப்படுவதாக அநேகமான கிரிக்கெட் வல்லுநர்களின் கருத்து உள்ளது.

முதலாவது அரையிறுதி 4-ம் திகதியும், இரண்டாவது அரையிறுதி 5-ம் திகதியும், இறுதி ஆட்டம் 7-ம் திகதியும் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## உலகக் கிண்ண பயிற்சிப் போட்டி
## இந்தியாவை வீழ்த்தியது பாகிஸ்தான்




இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிரான இருபது-20 உலகக் கிண்ண பயிற்சி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இலங்கையில் இன்று ஆரம்பமாகவுள்ள இருபது-20 உலகக் கிண்ண தொடருக்கு முந்தைய பயிற்சி ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில் நேற்று முன்னாள் சம்பியன்களான இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதின.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய கவுதம் காம்பீர் 10 ஓட்டங்களும், வீரேந்திர சேவாக் 26 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய வீராட் ஹோலியும், ரோகித் சர்மாவும் நிலைத்து நின்று ஆடினர்.

ரோகித் சர்மா 56 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ஹோலி ஆட்டமிழக்காமல் 7 பவுண்டரி, 2 சிக்சருடன் அரைச்சதம் கடந்து 75 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர் முடிவில் இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 185 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து 186 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 5 விக்கெட் இழப்பிற்கு இலக்கை அடைந்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆரம்ப வீரராகக் களமிறங்கிய அணித் தலைவர் மொகமட் ஹபிஸ் 38 ஓட்டங்களும், இம்ரான் நசிர் 13 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்னர் களமிறங்கி அதிரடியாக விளையாடிய கம்ரான் அக்மல் ஆட்டமிழக்காமல் 5 பவுண்டரி, 6 சிக்சருடன் அரைச்சதம் கடந்து 92 ஓட்டங்களும், சொய்ப் மாலிக் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

## மகிந்தவின்...

நோட்டு புத்தகத்தில் எழுதிய கடிதம் ஒன்று பொலிஸார் வசம் கிடைத்துள்ளது.

இந்தக் கடிதப் புத்தகம் ஆட்டோ வில் இருந்து கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விஜயராஜ் எழுதியுள்ள அந்த கடிதத்தில், இலங்கையில் தமிழர்களை கொன்று குவிப்பதே ராஜ பக்ஷவின் வேலை. ஈழத்தமிழர்கள் வீழ்ச்சிக்கு இந்திய மத்திய அரசும், அப்போது ஆண்ட தி.மு.க. அரசும் தான் காரணம். என்னைப் பற்றிக் கவலை இல்லை.

இலங்கை தமிழர்கள் காப்பற்றப்பட வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு முழு பாதுகாப்பும், சுதந்திரமும் கிடைத்தால் தான் என் ஆத் மா சாந்தியடையும். ராஜபக்ஷே இந்தியா வரக் கூடாது என்று அதில் கூறப்பட்டுள்ளது. (விரிவான செய்தி உள்ளே) (ந-11)

## கிழக்கின் முதலமை

(நேற்று முன்தினம்) காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட வேளை நாங்கள் மூவின மக்களுக்கும் பொருத்தமான ஆட்சி கிழக்கில் அமைவதை வலியுறுத்திக் கூறினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களுடன் இணைந்து ஆட்சி அமைக்க உதவுமாறு எங்களைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் நாங்கள் அரசுக்கு ஆதரவு அளிப்பதா? இல்லையா? என்பதைத் திட்டவட்டமாகக் கூறவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரபின் 12ஆவது மறைந்த தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மறைந்த தலைவரின் மறைவுக்குப் பின் அவரால் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சி எத்தனையோ சதிகளையும் வழக்குகளையும் சந்தித்திருந்தும் இன்னும் குலையாது நிலையாகவே இருக்கிறது என்பதற்கு சாட்சியாக நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் இருக்கின்றது.

தாங்கள் சமகால அரசியல் நிலைமையை அறிய ஆவலாய் இருப்பீர்கள். ஒன்று கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் முஸ்லிம் ஒருவர் என்பது உறுதியாகிவிட்டது.

நாங்கள் அரசுடனும் -தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். அரசாங்கத் தரப்பும் பேசியிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேசியிருக்கிறது.

ஆனால் நாங்கள் இன்னும் ஒருசில தினங்களுக்குள் எங்களுடைய முடிபை அறிவிப்போம்.

எப்படி இருப்பினும் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் முஸ்லிம் என்பது உறுதியாகிவிட்டது. ஏனெனில் கிழக்கு மாகாண சபையில் 15 முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளனர்.

இதைத் தீர்மானிக்கும் தார்மீக உரிமை முஸ்லிம்களுக்கு உள்ளது.

தாங்கள் இதை ஏன் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என ஊடகங்கள் எங்களைக் கேட்கின்றன?

ஆனால் தாமதிப்பது நாங்கள் அல்ல. ஆட்சியை அமைப்பதற்கு காத்திருக்கும் அரசாங்கமும் தங்களுக்கு பெரும்பான்மை உள்ளது எனக் கூறிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்தான் காரணம். நாங்கள் அல்ல.

ஆதரவு அளிப்பதுதான் நாங்கள். அரசாங்கம் ஆட்சியை அமைக்கின்றபோது சமூக நலனை முன்னிலைப்படுத்தி ஆட்சியை அமைப்போம். தேர்தல் காலங்களில் வெற்றிலைச் சின்னத்தை அவமதித்துப் பேசியதாகவும் சிலர் கூறுகின்றனர்.

ஆனால் இது தவறான வாதமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

## கிழக்கு முத...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் மற்றும் அமைச்சர் றிசாட் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு சபை தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் ஆகிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண முதலமைச்சர்களின் சத்திய பிரமாணம், பெரும்பாலும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு முன்னர் இடம்பெறலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நிலையில், இன்றைய தினம் புதிய முதலமைச்சர்களின் சத்திய பிரமாண நிகழ்வு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

## ரகசிய இராணு...

விற்பனை செய்துவரும் மேற்படி நபரிடம் இந்திய இராணுவ ரகசியங்கள் அடங்கிய சிடி(இறுவட்டு) இருப்பதாக கியூ பிரிவுப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்தே அவர் விமான நிலையத்தில் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகளுடன் தனக்கு தொடர்பு இருப்பதாகவும் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்திடம் குறித்த சிடியைக் கொடுக்கவே தான் இலங்கை பயணிக்க முயன்றதாகவும் பொலிஸாரிடம் சந்தேக நபர் கூறியுள்ளார். (ந-11)

## 150 பேருடன்...

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், திறைசேரி செயலர் பி.பி.ஜெயசுந்தர, தொடருந்து திணைக்கள முகாமையாளர் ஆரியரத்ன ஆகியோருடன் சீனத் தலைவர்கள் உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

இதேவேளை இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் அடுத்த சில நாட்களில் பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான 16 உடன்படிக்கைகள் அமுல்படுத்தப்பட உள்ளதாக வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியின் அடையாளங்களை...

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அதிகாரிகள் குழுவினர் நேற்று யாழ்., கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் பலாலிக்கு முற்பகல் 9.15 மணியளவில் விமானம் மூலம் வந்திறங்கிய ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் உயர்ஸ்தானிகத்தில் ஆசியப் பசுபிக், மத்தியகிழக்கு, வட ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களை கவனிக்கும் பிரிவுக்கு தலைவரான ஹானி மெகாலி தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் பிரதம செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியதோடு அரியாலை, நாவலடி, சாவகச்சேரி மறவன்புலோ ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் சென்று பார்வையிட்டனர்.

இதன்பின்பு யாழ்.மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருகைதந்த இந்தக் குழுவினர் அங்கு விசாரணைக்கு வந்திருந்த மக்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர், பிற்பகல் 2 மணியளவில் யாழ்.ஆயரை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள். இந்தச் சந்திப்புத் தொடர்பாக யாழ். ஆயர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நாவின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு வருகைதரவுள்ளார். இதற்கு முன்பாக நாட்டின் நிலைவரத்தை அறிந்துவர இந்தக்குழுவினரை இங்கு அனுப்பிவைத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இன்று (நேற்று) என்னுடன் இந்தக் குழுவினர் சந்திப்பினை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது பல விடயங்களை எடுத்துக் கூறியிருந்தேன். என்னுடன் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதனும் உடன் இருந்தார்.

இந்த நாட்டில் யுத்தம் இடம்பெறுவதற்கு முக்கியமாக இருந்த காரணம் எது என்பதை இலங்கை அரசாங்கம் ஆராயவில்லை. ஆராய்ந்து மீண்டும் இந்த நாட்டில் அவ்வாறான ஒரு அழிவு ஏற்படாது இருக்க நடவடிக்கை இருப்பதைவிடுத்து மாறாக அபிவிருத்தி மட்டும் மேற்கொண்டால் போதும் என்ற எண்ணப்பாட்டுடன் செயற்படுகின்றது.

மேலும் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த கால தாமதம் செய்து வருகின்றது.

அபிவிருத்தி செய்யப்படுகின்றது. நாம் அதை வரவேற்கின்றோம். அதற்காக அரசாங்கத்திற்கு பாராட்டு தெரிவிக்கின்றோம் ஆனால் அது மட்டும் போதுமென்ற எண்ணப்பாட்டை கைவிட்டுவிட்டு ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மேலும் வடக்கில் படைக்குறைப்பு இடம் பெற்று வருவதாக கூறப்படுவதில் எமக்கு திருப்தியில்லை. அது மட்டுமன்றி மக்களின் மீள்குடியேற்றமும் மிகவும் தாமதமடைக்கின்றது. வலி வடக்கில் 47 கிராமசேவையாளர் பிரிவில் 17 கிராம சேவையாளர் பிரிவில் இன்னும் மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அடிப்படை சேவைகள் பூர்த்தி செய்துகொடுக்கப்படவில்லை. யுத்த காலத்தில் சுமார் 80 வீதமான வீடுகள் வடக்கில் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் சொற்பளவு வீடுகளை கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்கள் மீள்குடியேற்றப்படும் போது தெருவிலா? அவர்களை இருக்க விட முடியும். நாம் அரசாங்கம் தான் வீடுகளைக் கட்டித்தர வேண்டுமெனக் கூறவில்லை. தொண்டு நிறுவனங்களைக் கொண்டும் வீடுகளை அமைத்து தர முடியும்.

அதுமட்டுமன்றி மயிலிட்டியிலுள்ள துறைமுகம் இன்னும் விடுவிக்கப்படவில்லை. வலி வடக்கிலுள்ள காசநோய் வைத்திய சாலை விடுவிக்கப்பட வில்லை எனப் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததோடு,

யுத்தகாலத்தில் உயிரிழந்த தமது உறவுகளுக்காக அஞ்சலி நிகழ்வுகளை நடத்தி கண்ணீர்விட்டு அழக்கூட முடியாத நிலையில் தமிழர்கள் உள்ளனர்.

இதனால் மன ரீதியாக வடக்கில் உள்ளவர்கள் பாதிப்படைந்துள்ளதோடு அதற்கான உளநல செயற்பாடுகள் கூட முன்னெடுக்க முடியாத நிலையில் தமிழர்கள் உள்ளனர்.

மேலும் காணாமல் போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும்.

உறவினர்களை இழந்த நிலையில் அவர்கள் இறந்து விட்டனர்களா? இல்லையா? என்பது கூடத் தெரியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இதன்போது ஐ.நா.குழுவினர் காணாமல் போனவர்கள் தொடர்பான பட்டியலை உங்களால் வெளியிட முடியாதா என கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த போது எம்மால் அவர்களின் பெயர்களை வெளியிட முடியாது. அரசாங்கமே அதனைச் செய்ய வேண்டும். மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிலும் பொலிஸ் நிலையத்திலுமே அவர்கள் தொடர்பான முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது எனக் கூறினேன்.

மேலும் இந்த நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற நோய் பீடித்துள்ளது. நாம் 70 வீதமானவர்கள் என்பதனால் எங்களுக்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டும் எனவும் நாமே ஆள்வோம் எனவும் தமிழர்களை உதாசீனப்படுத்துகின்றனர்.

இது எமக்கு புத்தர் தந்த பூமி நாமே ஆள்வோம் என்ற எண்ணப்பாட்டில் பெரும்பான்மை இனத்தவர்கள் செயற்படுகின்றனர் என சரமாரியாக குற்றம் சாட்டப்பட்டது.

இதேவேளை ஐ.நா. குழுவினரால் இங்கு மதங்களுக்கிடையில் மோதல்கள் உள்ளதா எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு மதங்களுக்கிடையில் எந்தவிதமான மோதல்களும் இல்லை. கடந்த காலத்தில் இடம்பெற்றது இன மோதலே அன்றி மதமோதல் அல்ல என பல விடயங்களை தாம் எடுத்துக் கூறியதோடு மகஜர் ஒன்றும் கையளித்ததாக ஆயர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## ஐ.நா.குழுவை கூட...

இலங்கை வந்துள்ளனர்.

இவர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரையும் சந்தித்துப் பேசிவருவதுடன் யுத்தம் இடம்பெற்ற வடபகுதிக்கும் விஜயம் செய்துள்ளனர். இந்நிலையில் இவர்களை சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புக் குழு சந்திக்க திட்டமிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல் தொடர்பில் சம்பந்தன் குழுவினர் இந்தப் பிரதிநிதிகளுக்கு விளக்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-11)

## இலங்.அரசு நேர்...

அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இன்னும் என்னென்ன விடயங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளன என்பதையும் அரசாங்கம் திறந்த மனதுடன் அறிவிக்க வேண்டும் என்று தாம் கருதுவதாக சுட்டிக்காட்டியுள்ள அவர். அரசாங்கத்தினால் வழங்கக் கூடிய விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு நம்பிக்கை இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கில் அதிகபடியான இராணுவ பிரசன்னம் இருப்பதாக தாம் கருதவில்லை என்றும், எனினும் அங்குள்ள இராணுவத்தினர் குறைப்பட்டு மக்களின் சாதாரண வாழ்க்கைக்கு இடமளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் அரசாங்கம் இதனை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-11)

## சொந்த இடங்களி...

குடியேற்றுவதற்கும் அரச இயந்திரம் வலுக் கட்டாயப்படுத்தி வருவதாகவும் அம்மக்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

அந்தக்கிராமத்திற்குச் சொந்தமான மக்கள் வவுனியா செட்டிக்குளத்திலுள்ள தடுப்பு முகாமில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அடிமைகள் போல் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்களுக்கு சொந்தமான இந்த பகுதிகளை நிரந்தரமாக ஆக்கிரமித்து இராணுவ மயமாக்குவதற்கும், சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்வதற்குமான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அரசின் இச் செயற்பாடுகளானது தமிழ்த் தேசிய இருப்பை இல்லாது அழிப்பதை நோக்கமாக கொண்டதாகும். முல்லைத்தீவு மாவட்டத்தின் கோப்பாபிலவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் பரவிப்பாஞ்சான் பகுதி மக்களுடன் அண்மைக்காலமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்கொண்டு வந்த கலந்துரையாடல்களின் அடிப்படையில் அந்த மக்களது சொந்த வீடுகளில் மீள்குடியமர அனுமதிக்க வேண்டும் என கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழக்கொன்றினை தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்த மக்கள் உடனடியாக மீள்குடியமர்த் தப்பட சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதபிள்ளையின் குழுவினர் விஜயம் செய்துள்ள இச்சமயத்தில் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் தொடர்பாக அவர்களது கவனத்தை ஈர்க்கும் பொருட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் கோப்பாபிலவு பிரதேச மக்களை உடனடியாக மீள்குடியமர்த்தக் கோரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை 21ஆம் திகதி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக நண்பகல் 12 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளது.

இப் போராட்டத்தில் சகல அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-6)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org